குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41] துன்மதி ஆண்டு வைகாசித்திங்கள் 10-6-82 [இதழ் 7

ருமையாதீனமுதற்குரவர்

குருபூஜை விழா

ஸ்ரீலஸ்ரீ
குருமகாசந்நிதானம்
அவர்கள்

கொலுக்காட்சியில்


திருப்பனந்தாள்
ஸ்ரீ காசிமடம்
ஸ்ரீமத் காசிவாசி
முத்துக்குமாரசாமித்
தம்பிரான்
சுவாமிகளுக்குப்

பொன்னுடை போர்த்தி ஆசியருளல்

12 ... 6 ... 82



தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[☆]—

அறிவுபரம் ஆனந்த
  மாகவில்லை ஆகம்
பொறிகரணம் யானெனதும்
  போக — நெறிதவஞ்சேர்
பேரன்போ இல்லை
  பினைநான் உனக்கடிமைக்(கு)
ஆர்என்பேன் சொக்கநாதா.

—சொக்கநாத வெண்பா. 89.

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

" ஞானசம்பந்தம் "

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 41 ‖ 10–6–82 ‖ இதழ் 7

உட்பொருள்

எண் பக்கம்

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 10
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 100
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 41 || துந்துபி - வைகாசி - 10—6—82 || இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

மாயூரம் மயிலாடுதுறை ஆகிறது!

" நிலைமை சொல்லுநெஞ் சேதவம் என்செய்தாய்
கலைகள் ஆய்வல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே"

— திருநாவுக்கரசர்.

திருமுறைச் சான்று :

சைவமும் – தமிழும் பிரித்தறிய இயலாத உறவுடையன. சமயம் வளர்த்த சான்றோர்களை இதுபற்றியே தமிழ் வளர்த்த சான்றோர்களாக முன்னோர் குறித்தனர். 'நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்', 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞான சம்பந்தன்' என்ற தொடர்கள் நினைவுகூரத்தக்கன. தமிழ் இலக்கியங்கள், பண்பாடு, கலை, மரபுகள் முதலியவற்றுக்குப் பல அருங் கொடைகளை வழங்கிய சைவம், தமிழக ஊர்ப்பெயர்கள் பலவற்றின் ஊற்றத்திற்கும், உயிர்ப்புக்கும் துணையாக விளங்கி வருகின்றது. இவ்வகையில் பல நூற்றுண்டுகளாக மாயூரம் என்றும் மாயவரம் என்றும் வழங்கப்பெற்றுவந்த பெயர்

மாற்றப்பெற்று, மயிலாடுதுறை என்னும் பண்டைப் பெயர் மீளவிருப்பது மகிழ்ச்சிக்குரியது. மயிலாடுதுறை என்ற இனிய தமிழ்ப் பெயரே மாயூரத்தின் பண்டைப் பெயர் என்பதை எடுத்துக்காட்டும் முதல் சான்று சைவத் திருமுறைகளிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றது.

நீர்வளமும், நிலவளமும் மிக்க தமிழகத்துச் சிற்றூர்களும், பேரூர்களும் பெற்றிருக்கும் பண்டைப் பெயர்கள் பலவும், சமயச்சார்பாலும், சமயத்தின் செல்வாக்காலுமே அமைந்துள்ளன என்பதற்குச் சான்றுகள் பலவுண்டு. இறைவன் – இறைவி – திருப்பெயர்கள், சமய வரலாற்று நிகழ்ச்சிகள், தலவிருட்சங்கள் இவை போன்ற அடிப்படைகள் பலவுண்டு. இயற்கை அழகாலும் பல ஊர்களுக்குப் பெயர் அமைந்தன. "பூவார்சோலை மயிலால, புரிந்து குயில்கள் இசைபாட, காமர் மாலை அருகசைய – நடந்தாய் வாழி காவேரி" என்ற சிலப்பதிகார வரிகள் காவிரி ஆற்றின் இரு கரைகளிலும் மயிலாடும் சோலைகள் நிறைந்திருப்பதை உறுதிப்படுத்துகின்றன. குரங்காடுதுறை என்ற பெயரைப்போல் மயிலாடும் காவிரித்துறை அமைந்தநகர் மயிலாடுதுறை என்று வழங்கப் பெற்றது. திருஞானசம்பந்தர் மற்றும் திருநாவுக்கரசர் அருளிய தேவாரப்பதிகங்களால், ஊர்ப்பெயர் மயிலாடுதுறை என்பதும், இறைவன் மயிலாடுதுறை அரன், மயிலாடுதுறையன் என்பதும்– சோழர்காலக் கல்வெட்டுக்களால் திருமயிலாடுதுறை உடையார் என்பதும், அம்மையின் திருப்பெயர் அம்சொலாள் என்பதும் நன்கு புலனாகின்றன.

பெயர் மாற்றம் :

ஆட்சி மாற்றங்களாலும், பிற மொழிச் செல்வாக்காலும் நமது உச்சரிப்பில் நேர்ந்த பிழைகளாலும் இப்பொழுதுள்ள ஆங்கிலமொழி மோகம் போன்ற பிறமொழி மோகத்தாலும் மக்களின் அறியாமையாலும் தமிழக ஊர்ப் பெயர்கள் பலவும் பலவாறு சிதைந்து பண்டைவடிவங்களில் மாற்றமுற்றன. திருமறைக்காடு என்பது வேதாரண்யம் எனவும், திருமுதுகுன்றம் என்பது விருத்தாசலமாகவும், குடமூக்கு என்பது கும்பகோணமாகவும் திரிந்துள்ளன. இவை வடமொழி மோகத்தால் விளைந்தன. பரங்கிப்பேட்டை என்பது 'போர்ட்டநோவா' என்றும், கொள்ளிடம் என்பது 'கொல்ரூன்' எனவும், தரங்கம்பாடி என்பது 'ட்ரேங்குபார்' என்றும் மாறியமை ஆட்சி மாற்றங்களால் விளைந்தன. மயிலாடுதுறையுறை அம்மையின் திருப்பெயரை அம்சொலாள்என்பது நம்மவர்களின் உச்சரிப்புப்

பிழையால் அஞ்சலாள் என மாறி, பின் இச்சொல் அடியார் களின் அச்சம் நீக்குபவள் எனப் பொருள்கொள்ளப்பெற்று அபயாம்பிகை எனத் திரிந்தது. இன்றும் இப்பெயரே நிலவு கிறது. இத்தலத்தில் துலாநீராடும் காவிரித்துறைக்குத் துலாக் கட்டம் என்பது பெயர். இன்று இச்சொல் உருமாறி லாகடம் என்று வழங்குகின்றது. இவ்வாறே மயிலாடுதுறையும் சம்ஸ் கிருத மோகத்தால் மாயூரம் என மாறியது. மயூரம் எனும் சொல் மயிலைக்குறிக்கிறது. மாயூரம் என்பது மயில் சம்பந்தப்பட்ட இடத்தைக் குறிக்கின்றது. இங்ஙனம் மயூரம் என்றும் மாயூரம் என்றும் வழங்கிய இத்தலப்பெயர் மக்களின் அறியாமையால் மாயவரம் என்று மாற்றி வழங்கப்பெற்றது.

மயூர தாண்டவம் :

இத்தலத்துக்கு அமைந்த தல புராணம் ஒன்று உண்டு. தக்கனின் வேள்வியை அழிக்க இறைவன் வீரவாகுதேவர் முதலானவர்களை அனுப்பிவைத்தபொழுது அவ்வேள்வியில் அலங்காரப்பொருளாய் இருந்த மயில் ஒன்று அம்பிகையை அடைக்கலம் வேண்டிச் சரண் அடைந்தது. அம்மயிலுக்கு அடைக்கலம்கொடுத்தமையால் ஆண்டவன் அம்பிகையின்மீது கோபங்கொண்டு நீ மயிலுக்கு அடைக்கலம் தந்தமையால் அந்தமயிலுருவோடு மண்ணுலகு செல்லுக என்று அருளாணை பிறப்பித்தார். அக்காரணத்தால் இறைவி மயிலுருக்கொண்டு இத்தலத்தில்வந்து இறைவனைப் பூசித்தாள். பூசனைக்கு மகிழ்ந்த இறைவன், தாமும் ஆண்மயில் வடிவுகொண்டு அம்மையோடு நடனமாடி, அம்மைக்கு அருள்சுரந்தான். இறைவன் ஆடிய இத்தாண்டவம் மயூரதாண்டவம் என்று போற்றப்பெறுகிறது. இத்தலத்திலுள்ள காவிரியின் துறையில் துலா மாதமாகிய ஐப்பசி மாதம் முப்பது நாட்களும் நீராடுவது மிகச்சிறப்பானது. அதனால் இத்துறைக்குத் துலாக்கட்டம் என்று பெயர். மார்கழி நீராடலைப்போன்று துலா நீராடல் என்பது இத்தலத்தில் பக்தர் களால் பெரிதும் போற்றப்பெறுவது. மாதம் முப்பது நாட்களும் விழா நடைபெறும். அவற்றில் கடைசிப் பத்து நாட்களும் மிகச்சிறப்பாக விழாக் கொண்டாடப்பெறும். கடைசி நாளில் நீராடும் விழாவினைக் கடைமுழுக்கு என்பர். தமிழக ஆதீனங் களின் மகாசந்நிதானங்கள் இந்தநாட்களில் இங்கு எழுந் தருளிப் புனித நீராடி இத்தீர்த்தத்தின் சிறப்பை விளக்கி யருளுவர்.

மேலும் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பல்லாயிரக் கணக்கானவர் இங்குவந்து தங்கி மாதம் முப்பது நாட்களும்

புனித நீராடுவர். கங்கை முதலிய புண்ணிய நதிகள் யாவும் தத்தமது பாபங்களைப் போக்கிக்கொள்ள அன்று காவிரியில் நீராடவருவதாகக் கூறப்படுகிறது. பஞ்சமூர்த்திகள் எழுந்தருளித் தீர்த்தம் கொடுத்தருளுவர். இறைவன் ஆண்மயில் உருக் கொண்டு தாண்டவம் ஆடி அம்மைக்குக் காட்சி கொடுத் தருளியதுறை என்ற காரணத்தால் மயிலாடுதுறை என்றபெயர் அமைந்ததாகத் தலபுராணங்கள் விரித்துரைக்கின்றன.

நிறைவேறுகிறது :

பெயர் வந்த வரலாறு பலவாகத் தோன்றினும் மயிலாடு துறை என்பதே பண்டைப்பெயர் என்பதில் இருவேறு கருத் தில்லை. காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்கள் அவ்வக்கால நிலைமைக்குஏற்ப அமைவன. எங்கும், எதிலும் பண்டைத்தமிழ் வடிவங்களை நிலைநாட்டவேண்டும் என்பது தற்போது அறிஞர் களின், ஆட்சியாளர்களின் விருப்பமாகத்திகழ்கிறது. இவ்வகை யில் மாயூரம் என்ற பெயர் மயிலாடுதுறை என்று வழங்க வேண்டுமென1946லேயே பேராசிரியர் திரு. R. P. சேதுப்பிள்ளை தாம்எழுதிய "ஊரும் பேரும்" என்றநூலில் வலியுறுத்தியுள்ளார். மாயூரம் நகராட்சியில் சில ஆண்டுகளுக்குமுன்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. 1970–இல் திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச்சங்கத்தினரும் பெயர்மாற்றம் வேண்டி அரசுக்கு எழுதினர். அடுத்து மாயூரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. என். கிட்டப்பா இத்தீர்மானத்தைச் சட்டமன்றத்திற்குக் கொண்டுவந்தார். சட்டமன்றத்தின் பெருமுயற்சியாலும் தமிழக அரசின் ஆதரவினாலும் மத்திய அரசு, மயிலாடுதுறை என்ற பண்டைப் பெயரைவழங்க, அனுமதித்தது. ஜூன் திங்கள் 27 – ஆம் நாளன்று அதிகாரபூர்வமாக மாயூரம் மயிலாடுதுறையாக மலர்கிறது. இவ்வகையில் முயற்சி மேற்கொண்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். வேண்டுகோளை ஏற்று உரிய மாற்றத் திற்கு அனுமதித்த மாநில, மத்திய அரசுகளை மக்கள் போற்றுவர் என்பதில் ஐயமில்லை. சிவனருள்தழைக்கும் இத்திருத்தலம் மயிலாடுதுறையாய் என்றும் விளங்கவும் அருள்மிகு அம்சொலாள் உடனுகிய மயிலாடுதுறையுறை அரனருளால் மக்கள் நலமெலாம் பெற்று நீடு வாழவும் ஞானசம்பந்தம் நாளும் பிரார்த்தனை செய்வதில் பெருமை கொள்கிறது.

"வெஞ்சி னக்கடுங் காலன் விரைகிலான்
அஞ்சி றப்பும் பிறப்பும் அறுக்கலாம்
மஞ்சன் மாமயி லாடு துறையுறை
அஞ்சொ லாளுமை பங்க னருளிலே." —நாவுக்கரசர்.

வாழ்க மயிலாடுதுறை! வளர்க மயிலாடுதுறை மக்கள்!

உ

குருபாதம்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

தருமையாதீனக் குருபூஜை விழாவின்போது

சமயப் பயிற்சியாளர்கட்கும் அன்பர்கட்கும்

வழங்கியருளிய

ஆசியுரை.

6—6—1982

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரைஆள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்,

குருவின் பெருமை

நமது ஆதீன ஆதிபரமாசாரியர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவின் அங்கமாக இன்று சமயப்பயிற்சி வகுப்புத் தொடங்குகின்றது, இவ்வகுப்பில் பங்குகொள்கின்றவர்கள் அனைவரும் அடைய விரும்புவது ஞானமே என்றால் அது புகழுரை ஆகாது உண்மையுரையேயாகும்.

பிற பொருள்களை யாவரிடத்தினின்றும் பெறுதல் கூடும். ஆனால், ஞானம் குருவினாலன்றிப் பிறர் ஒருவரிடத்திலும் பெறுதல் இயலாது. இதனை,

" ஞானம் இவனொழிய நண்ணியிடும், நற்கல் அனல்
பானு ஒழியப் படின் "

என உமாபதிதேவர் தமது திருவருட்பயனில் கூறினர். சூரியன் இல்லாமலே சூரியகாந்தக்கல்லில் நெருப்பு உண்டாதல் கூடுமாயின், குருவில்லாமலே ஞானத்தைப் பெறுதல் கூடும் என்பது அதன் பொருள். இன்னும் அவர் அந்நூலிலே,

"எமக்கென் எவனுக் கெவைதெரியும் அவ்வத்
தமக்கவனை வேண்டத் தவிர்"

என்றார். அஃதாவது, ஒவ்வொரு துறையிலும் சென்று அதில் பயன்பெற விரும்புவோர் யாவரும் அந்த அந்தத் துறையில் அனுபவம் பெற்ற முதியோரை அடைந்து அதற்குரிய நெறி முறைகளை அறிந்து அவ்வழியிலே செயற்பட்டுப் பயன் பெறுதல் உலகில் கண்கூடான நிகழ்ச்சியாய் இருக்க,ஞானத்தை மட்டும் ஒருவன் அதனை உணர்த்துபவர் ஒருவரும் இன்றித் தானே பெற்றுவிடுவது எப்படி என்றார்.

உழவு, வாணிபம் முதலிய தொழில்களிலும், ஓவியம், சிற்பம், இசை, நாடகம் முதலிய கலைகளிலும் சிறந்து விளங்க விரும்புபவர், அவற்றில் வல்லவர்களை அடைந்து அவர்கள் மனம் மகிழும்வகை நடந்து அவற்றைப் பெறுவது உலகில் இயல்பாக எங்கும் நடைபெறுவது.

ஒவ்வொரு துறையிலும் அனுபவம்பெற்று அதில் பிறருக்கு வழிகாட்டிகளாய் இருப்பவர்கள், 'வல்லுநர்' என்றும், 'தலைவர்கள்' என்றும், 'வழிகாட்டிகள்' என்றும் பெயர்பெற்று விளங்குதல் தெளிவு. அதுபோல ஞானனுபவம்மிக்கவர்களாய்ப் பிறருக்கும் ஞானத்தை அளிக்கவல்ல அருளாளர்கள் 'குரு' என்றும், 'ஆசாரியர்' என்றும், 'ஆசிரியர்' என்றும் பெயர் பெற்று விளங்குகின்றார்கள். 'குரு' என்பதற்குப் பொருள் கு – அஞ்ஞானம். ரு – நீக்குதல். எனவே அஞ்ஞானத்தை நீக்குபவர் என்பதாகும். 'ஆசிரியர்' என்பதற்கும், ஆசு–குற்றம்; அஞ்ஞானம். இரியர் – நீக்குபவர் என்பதுதான் பொருள். 'ஆசாரியர்' என்பதற்கு, நல்லொழுக்கத்தைக் கற்பித்தல் மட்டும் அன்றி, அவ்வொழுக்கநெறியில் நடந்து காட்டுபவர் என்பதுமாகும்.

இருவகை ஞானங்கள்

ஞானமாவது அறிவே யாகையால், எந்தத் துறையில் அறிவைத் தருபவரையும், 'குரு' என்றும், 'ஆசிரியர்' என்றும் சொல்லலாம். எனினும் மெய்ப்பொருள் அறிவே பேரறிவும், மேலான அறிவுமாகும் ஆகையால், அதுவே பெறுதற்கரியது அதனால், பிற அறிவைத் தருகின்றவர்களை, 'குரு' அல்லது 'ஆசாரியர்' எனக் கூறாமல், மெய்யறிவைத் தருகின்றவர்களையே

'குரு' என்றும், 'ஆசாரியர்' என்றும், கூறுதல் மரபாக உள்ளது. அவ்வாறே, மற்றைய அறிவு 'ஞானம்' எனப்படாது. மெய்ப் பொருள் அறிவே, 'ஞானம்' எனப்படுகின்றது.

இனி மெய்ப்பொருள் அறிவாகிய ஞானம், 'அபர ஞானம், பரஞானம்' என இருவகைப்படும். அபரம் – படிநிலை. பரம் – முடிநிலை. மெய்ப் பொருளை ஒருவன் உண்மையாக உணர்தல் அதனை நேரேகண்டு அதன் தன்மையில் தான் அழுந்தி நிற்றலே யாகும். எனவே மெய்ப்பொருளை அனுபவமாக உணர்ந்து அதன் இன்பத்தில் திளைத்திருத்தலே 'பரஞானம்' என்பது தெளிவு.

இந்த அனுபவ ஞானம் எவருக்கும் முதலிலே வந்து விடாது. மெய்ப் பொருளின் இயல்பை ஞான குரு சில சொற்களால் உபதேசிக்கக் கேட்டலாலும், பின்பு, மெய்ப் பொருளின் இயல் புகளைப் பலவகையில் விரித்துக் கூறும் நூல்களை நல்லாசிரியர் ஓதுவிக்க ஓதி உணர்ந்து அவற்றின் பொருளை ஆசாரியர் உபதேசித்த உபதேச மொழிகளோடு இணைத்துப் பலகாலும் சிந்தித்தலாலுமே உண்டாவதாகும். எனவே, பரஞானமாகிய அனுபவ ஞானத்திற்கு அபர ஞானமாகிய கலைஞானம் படிநிலை என்பது விளங்கும்.

வித்தியா குருவும் ஞான குருவும்

பரஞானம், அபர ஞானம் இரண்டும் அஞ்ஞானத்தைப் போக்குவன ஆயினும், அபர ஞானம் அஞ்ஞானத்தைப் போக் குதல் விளக்கு இருளைப் போக்குவது போன்றதும், பரஞானம் அஞ்ஞானத்தைப் போக்குவது சூரியன் இருளைப் போக்குவது போன்றதும் ஆகும். எனவே, அபர ஞானம் அஞ்ஞானத்தை முற்ற நீக்காதாகப் பரஞானமே அஞ்ஞானத்தை முற்றிலும் நீக்கு வதாகும். அதனல் 'அஞ்ஞானத்தைப் போக்குபவர்' எனப் பொருள்தரும் 'குரு' என்னும் பெயர் பல்லாற்ருலும் அஞ் ஞானத்தை முற்றப் போக்குபவராகிய ஞான குருவையே குறிக்கின்றது. நூலறிவை மட்டும் தருபவர், 'வித்தியாகுரு' எனப்படுவர்.

ஞானசம்பந்தர்தம் ஞானப்பேறு

ஞானத்தை முறையாகப் பெறுகின்றவர்கள் முதலில் அபர ஞானமாகிய கலைஞானத்தைப் பெற்றுப் பின்னர் அதன்வழியே பரஞானத்தைப் பெறுதற்குரியர். ஞானசம்பந்தருக்கு அம்மை

ஞானப்பாலை ஊட்டியபொழுது ஞானசம்பந்தர் இந்த இரண்டு வகையான ஞானங்களை அப்பொழுதே பெற்ருர் என்பதனைச் சேக்கிழார்,

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்,
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்"

எனக் குறிப்பிடுகின்ருர். இதில் முன் இருவரிகளில் சொல்லப் பட்ட இரண்டு ஞானங்களோடு, பின் மூன்ருவதுவரியில் சொல்லப்பட்ட இரண்டு ஞானங்களையும் முறையே இணைத்து நோக்குதல்வேண்டும் அஃதாவது, 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானம்' என்றும், 'பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞான மாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானம்' என்றும் இயைத்துக் கொள்ளுதல் வேண்டும். முன்னே சொல்லப்பட்டது அபர ஞானமும், பின்னே சொல்லப்பட்டது பரஞானமும் ஆகும்.

சிந்தித்தல் ஆராய்ச்சியேயன்றி அனுபவம்அன்று. அதனல், அஃது அபர ஞானமே. பாங்கினில் ஓங்குவது, அஃதாவது செவ்வனே நிலைபெற்று வளர்வது அனுபவஞானம். அது 'பவம்' எனப்படுகின்ற பிறப்பை அறவே நீக்குவது. இந்த அனுபவ ஞானம் முதிரப் பெற்றுப் பிறர்க்கும் அதனைத் தர வல்லவரே குருவாவார்.

குரு, தாமே ஞானக் கருவூலமாய் இருப்பதுடன் அக் கருவூலத்தை அடைதற்கு வழிகாட்டுபவராயும் இருத்தலால், தேசிகர் என்றும், 'பண்டாரசந்நிதி' என்றும், 'சந்நிதானம்' என்றும் போற்றப் பெறுகின்ருர். 'பண்டாரம்' என்பது பொது வாகக் 'கருவூலம்' எனப் பொருள்தருமாயினும், அது ஞானக் கருவூலத்திற்கே சிறப்புப் பெயர் ஆகின்றது.

"ஆலம் உண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்குகின்ருன் வந்து முந்துமினே"

என அருளிச்செய்தார் மாணிக்கவாசகர். மகாஎன்பது பெருமை எனப் பொருள்தரும். 'மகா சந்நிதானம்' என்பது, ஏனைய பெருமைகள் எல்லாவற்றினும் தலையாய பெருமையாகிய ஞானத்தைத் தரும் பெருமையை உடையவர் எனப் பொருள் தந்து உண்மைப் பெருமையை உணர்த்தி நிற்கிறது.

குருபக்தியின் சிறப்பு

இத்தகைய பெருமையை ஒருவர் பெறுதற்குத் தாமும் இத்தகைய ஆசாரியரை அடைந்து அவரையே தமக்கு அன்னையும் தந்தையும் மற்றும் யாவுமாகக் கொண்டு, அவர்பால் அளவிறந்த பத்தியும் பணிவும் உடையாராய் அவர் திருவடி நிழலிலே நீங்காதிருத்தல் வேண்டும். அவ்வாறிருந்தவர் தாம் நம் ஆதி பரமாசாரியர். அதனல்தான் அவர்கள் பின்பு தாமே பண்டாரசந்நிதியாயும், மகாசந்நிதானமாயும் விளங்கினர்கள்.

அவர்கள் மதுரையில் இருந்தபொழுதே இறைவன் அவர்கட்குத் திருவாரூரில் உள்ள ஞானப்பிரகாசரது பெருமையை உணர்த்தினன். அதனைக் கேட்டவுடனே அவர்கட்கு அக்குருமூர்த்தியிடம் அளவிறந்தபக்தி உளதாயிற்று. அதனல் அவர்கள் திருவாரூருக்கு விரைந்து சென்று அங்கு அக்குருமூர்த்திகளைக் கண்டார். கண்டமாத்திரத்திலேயே தமது பாச இருள்கள் எல்லாம் அறவே நீங்கின; சிவஞானத்தால் சிவத்தைப் பெற்று சிவானந்தத் தேனை முகந்து உண்டேன் என்று அவர்களே அருளிச் செய்கின்றுர்கள்.

" கண்டேன்இப் பாசம் கழிந்தேன் அமுதைமுகந்து
உண்டேன் சுகானந்தத் துள்ளிருந்தேன் — வண்டிமிர்காத்
தேனைப் பொழிகமலைச் செங்கமலப் பொற்பாத
ஞானப்பிர காசனையே நான் "

ஞானத்தை விரும்புகின்ற ஒவ்வொருவர்க்கும் இத்தகைய குரு பக்தி, அல்லது ஆசாரிய பக்தி இன்றியமையாததாகும். குரு பக்தியாலே குருவினது அருள் எளிதாகக் கிடைக்கும் என்பதற்குப் பாரதத்தில் சொல்லப்படுகின்ற 'ஏகலைவன்' என்னும் ஒரு வேடன் கதையே போதுமானது.

இத்தகைய குருபக்தியின் அடையாளமாகவே இக்குருபூசை விழா நிகழ்கிறது. இதன் பயனக இவ்வகுப்பில் கலந்து கொள்கின்றவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அபரஞானமாகிய கலை ஞானத்தின் வழியே பரஞானமாகிய சிவஞானம் சித்திக்க ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன்திருவருளைச் சிந்திக்கின்றேம்.

உவமையிலாக் கலைஞானம் வளர்க !

உணர்வரிய மெய்ஞ்ஞானம் ஓங்குக !

தித்திக்கும் அருள் சுரக்கும் முத்தையா!

திரு, பொன். பாஸ்கரமார்த்தாண்டன்

(மலர் 41, இதழ் 6, பக்கம் 270 d இன் தொடர்ச்சி)

செவ்வாய், முருகனின் நாள்.

இந்தத்தலத்தில் அனைத்து விசேடங்களும் செவ்வாய்க் கிழமைதான். அதிலும் தைச்செவ்வாய் முத்துக்குமாரசுவாமி விழா தனிச்சிறப்பு... ஒவ்வொருமாதமும் கார்த்திகைத் திருநாளில் முருகப்பெருமான் எழுந்தருளுவதும், அம்மையப்பரிடம் விடை பெறுவதும் அபிஷேக மண்டபத்தில் அபிஷேகம் கொண்டு ஆயிரமாயிரம் மக்களுக்கு அருள் பாலிப்பதுவும் மெய்சிலிர்க்க வைக்கும் திருக்காட்சிகள்...

ஒரு செல்லப்பிள்ளை அள்ளி அள்ளி அருள் வழங்கும் அருந்தலம் !

அரசாங்க அலுவலகங்களில் பொதுமக்களுக்குப் பதில் சொல்லி, அவர்கள் பிரச்சினையைத் தீர்க்கப்பொது ஜனத் தொடர்பு அதிகாரி இருப்பார். அதுபோல் இத்தலத்தில் மக்கள் தொடர்புத் தெய்வம் முருகப்பெருமான் தான். அவரைச் சரணடைந்து விட்டால் போதும்; மற்றவர்களின் அருளும் கூடிவிடும்... அவருக்கு அத்தலத்தில் என்ன செல்வாக்கு என்று ஒவ்வொரு நாள் அர்த்தஜாமப் பூஜையின் போதே காண்கிறோம்...

எந்தத் திருத்தலத்திலும் ஈசனும் – ஈஸ்வரியும் பள்ளியறை சேர்ந்த பின்னர்தான் அன்றைய தீர்த்தப் பிரசாததரிசனம் நிறைவு பெறும்...

ஆனல், இந்தத்தலத்தில் மட்டும் அப்படியல்ல. அர்த்த ஜாமப் பூஜையின்போது முத்துக்குமார சுவாமியின் சந்நிதியில்

பூஜையாகி, அவருக்குச் சார்த்தியிருக்கும் நேத்திரப்பொடி சந்தனம் (அபூர்வப்பிரசாதம்) விநியோகம் ஆனதும் அத்துடன் பூஜை முடிந்து விடுவதாக ஐதீகம். அதற்குப்பின்தான் சுவாமி சந்நிதியிலும், அம்பாள் சந்நிதியிலும் பூஜை ஆகும் என்ருலும், அங்கே விபூதி பிரசாதம் கூட விநியோகம் கிடையாது.

இந்தத் தலத்தில் இந்த செல்லப்பிள்ளைக்குத் 'தாலேலோ தாலேலோ' என்று தாலாட்டுப் பாடித் தூங்கவைக்கும் காட்சி சுவையிலும் சுவை.

முத்துக்குமாரசாமி உற்சவமூர்த்திக்கு இரட்டைத் திருவாசி அமைந்திருப்பதுகூட அவருடைய இரட்டைப் பெருமைக்குச் சான்று போல்தானிருக்கிறது.

இந்த முருகன், அம்மையப்பருக்கு மட்டும்தான் செல்லமா? நமக்கு இல்லையா ?

அதோ, அந்தச் சந்நிதியில் நின்றுதொழும் போது நம் காதுகளில் தேனுய்ப் பாய்ந்து மெய்சிலிர்க்க வைக்கும் ஒரே குரல்: 'முத்தையா!' 'முத்தையா!' என்பதுதான்.

முத்துக்குமாரசுவாமியை 'முத்தையா', 'முத்தையா' என்றுதான் பக்தி பொங்கிட சிலிர்க்கச் சிலிர்க்க அழைத்து உருகுகிறது பக்தர் கூட்டம்.

ராமநாதபுரம்-சேலம்போன்ற இடங்களிலிருந்து பரம்பரை பரம்பரையாக இந்த முன்னேறிய காலத்திலும், வண்டிகட்டிக் கொண்டு நடந்துவரும் பக்தர்களும்-தம் குடும்பத்துக்குழந்தை களுக்கு முதன்முதலாக இத்தலத்தில்தான் முடியிறக்கும் விழா நடத்தும் பெற்ருேருமாக அங்குப் பெருகி நிற்கும் பக்தர்கள் கூட்டத்தில் எங்கும் ஒலிப்பது 'முத்தையா முத்தையா' என்ற குரல்தான். (அங்கு தரிசனத்துக்கு வந்திருந்த அ. தி. மு. க. மாநில விவசாயப் பொதுச்செயலாளர் திரு. கோ. லட்சுமணன், தன் குடும்பத்துக்குப் பரம்பரை, பரம்பரையாக முத்துக்குமார சாமிதான் குலதெய்வம்!' என்கிருர்,)

இந்த பக்தர்கள் மட்டுமா ?

திருச்செந்தூரில் முருகன் அருளால் பேசும்பாக்கியம்பெற்ற குமரகுருபரசுவாமிகள் பிள்ளைத்தமிழ்பாடி மகிழ்ந்திருக்கிருர்கள், இந்த முருகன் பேரில்!

அருணகிரிநாதர், தன்திருப்புகழில் இந்த முத்துக்குமார சுவாமியைச் சித்தம்கனியப்பாடி மகிழ்ந்து பூரித்திருக்கிருர்.

தருமை ஆதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள் தான் இயற்றிய முத்துக்குமார சுவாமி திருவருட்பாவில்,

" முத்தர் குருவே – யோக சித்தர் குருவே –
பால முத்துக்குமார குருவே! "

என்று சிந்தை கனியக் கனியப் பாடி உருகுகிறார்!

முத்துக்கு முத்தாய் – சித்தர்க்குச் சித்தனாய் – பக்திக்குச் சித்தாய் அந்தப்பித்தருக்கே செல்லமாய்த்திகழும் முத்துக்குமார சுவாமியையும் அம்மையப்பரையும் தரிசித்து வலம் வந்த நாம் ஒரு சந்நிதியில் மெய்சிலிர்க்க நிற்கிறோம்.

அதுதான் ஜடாயு குண்டம்!

ஆம்; ராமாயணத்தில் இறவாப் பெருமை பெற்ற ஜடாயு, ஸ்ரீராமபிரானால் தகனம்செய்யப்பட்ட இடம், அது!

அந்த மகத்தான நிகழ்ச்சியை நினைத்துப் பார்க்கிறோம்...

ஃ ஃ ஃ ஃ

ராமாயணத்தில்—

இராவணன் சீதையைத் தூக்கிச்செல்கிறான். அப்போது ஜடாயு என்ற பறவை அவனை மறிக்கிறது. அந்த ஜடாயு, இந்த வைத்தியநாதசுவாமியை துவாபர யுகத்தில் (இது வகுளவனமாக இருந்தபோது) வழிபட்டுக் கொண்டிருந்த உன்னதமான பட்சி.

தன்னை எதிர்த்து மறித்த ஜடாயுவை வெற்றி கொள்ளப் போரிடுகிறான் ராவணன். சீதையை அவன் தூக்கிச் சென்று விடக் கூடாதே என்ற பதைப்பில் ஜடாயு போரிடுகிறது.

ஜடாயுவின் வல்லமை புரியாத ராவணன் அதைப் புரிந்த பின் தடுமாறுகிறான். அதை எப்படிவெல்வது என்று புரியாமல் குழம்புகிறான். எங்கே தாக்கினாலும் ஜடாயு சாய்வதாக இல்லை.

கடைசியாக ஜடாயுவிடமே, " உன் உயிர் நிலைஎங்கிருக்கிறது? என்ன செய்தால் நீ இறப்பாய்? " என்று கேட்கிறான்.

என்ன ஈனமான கேள்வி...? – நா கூசாமல் கேட்கிறான் ராவணன்.

வேதம் கற்ற ராவணன் – பிரம்ம குலத்தவனான ராவணன் – பொய்வேடமிட்டுப் பொய்மானை ஏவி கீழ்மைப் புத்தியோடு பிறன் மனைவியைத் தூக்கிச் செல்லும் ஈனக் காரியத்தைச் செய்திருக்கிறான்.

ஆனல் அந்தப் பொய்யனிடம், தன் உயிர்நிலையைப் பற்றிய சத்தியத்தைச் சொல்கிறது ஜடாயு என்கிற பட்சி, "என் உயிர் என் இறக்கைகளில் இருக்கிறது" என்று.

மறுகணம் அந்த மாபாதகன் அதன் இறக்கைகளை வெட்டி அதைச் சாய்க்கிருன்.

மரணத்தின் முனையிலும் உண்மையே பேசிய ஒருசத்தியமே ஜடாயுவின் உருவில் அங்கே சாய்ந்தது...

அந்த உன்னத சத்தியத்துக்கு இறுதிக்கடன் செய்ய வேணடுமே...

ஆம்; சத்தியத்துக்கு இறுதிக்கடன் செய்யும் தகுதி யாருக்கு உண்டு... ?

இன்னெரு சத்தியத்துக்குத்தான் உண்டு.

தந்தையின சத்தியவாக்குக்காக வனவாசம் மேற்கொண்டு அதோ சத்தய சொரூபமாக வருகிருனே, அந்த சத்தியநாதன் ஸ்ரீராமபிரானுக்குத்தான் உண்டு...

அவனுக்காகக் காத்திருந்து. அவனிடம் சீதை பற்றிய செய்தியைக் கூறிவிட்டு, அவன் மடியில் உயிர் விடுகிறது ஜடாயு.

அந்த ஜடாயுவுக்கு ஒரு மகனுக நின்று தகனக்கிரியை செய்கிருன் ராமன்.

அயோத்தியில் இறந்த தசரதனுக்கு அந்த ஸ்ரீராமன் தகனக்கிரியை செய்யவில்லை. இத்தனைக்கும் மூத்த பிள்ளையான அவன் தான் செய்திருக்க வேணடும் ஆனல், செய்யவில்லை.

வைத்தியருக்கும் வைத்தியரான வைத்தியநாதர்!

காரணம்?

அவன் சாதாரண மனிதனுக்குப் பிதுர்காரியம் செய்ய அவதரித்தவன் அல்லன்: சத்தயத்துக்குத்தான் கடமை செய்ய வந்தவன். அதனல்தான் தசரதனுக்குச் செய்யவில்லை, ஜடாயுவுக்குச் செய்தான்!

இந்த மகத்தான சம்பவம் நிகழ்ந்தது இத்தலத்தில் தான்.

அந்த ஜடாயுவின் சாம்பல் விழுந்தஇடம் என்பதற்கு அடையாள நினைவாக அங்கிருக்கும் குண்டத்திலுள்ள திருச்சாம்பலை பக்தியோடு எடுத்து பூசிக் கொள்கிருர்கள் மக்கள்.

நானும் எடுத்து பூசிக்கொண்டேன். சத்தியத்தின் ஒரு துளியாவது நம்மேல் படட்டுமே!

ஃ ஃ ஃ ஃ

இந்தச் சந்நிதியில் இறைவனைத் துதித்துப் பெருமைபெற்றது துவாபர காலத்து ஜடாயு மாத்திரம்தானா...?

இந்தச் சந்நிதியில் நாலைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு சம்பவம். ஆலய சீஃப் சூப்பரிண்டெண்ட் திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை மன நெகிழ்ச்சியுடன் தெரிவித்தார் அதை...

சுமார் 28 வருடமாக அந்தத்தலத்தில் இருந்த கோவில் யானை அது.

தினந்தோறும் நடக்கும் கஜபூஜையில் கலந்துகொள்வது — குழந்தைகளுக்கு முதல் முடி எடுக்கும் பிராத்தனை ஸ்தலமான அதில் முடி எடுக்கும் குழந்தைகளைத் தன் துதிக்கை மூக்கினால் ஆசீர்வதிப்பது (விஞ்ஞானப்படி யானை மூச்சுப்படுவது ரோக நிவாரணமாம்!) — திருவிழாக் காலங்களில் தட்டிச் சுற்றி மண்டபத்தைச் சுற்றிச் சுற்றி இறைவனுக்கு வெண்சாமரம் வீசுவது ...

இவையெல்லாம் அந்த யானையின் பணிகள் ... 28 ஆண்டுகளாக மிக அமைதியாக அதுசெய்துவந்த பணிகள்.

திடீரென்று அந்த யானைக்கு உடல்நோய் ஏற்பட்டது. அதன் கொட்டகையில் வைத்து வைத்தியம் செய்து கொண்டிருந்தார்கள்.

அந்த யானைக்கொட்டகை இறைவன் சந்நிதிப் பார்வைக்கு ஒதுங்கிய பகுதியில், தெற்கு வடக்காக இருந்தது. சுவாமி கீழ்ப்புறத்தில் அமர்ந்து மேற்குப் பார்த்திருக்கிறார்.

யானைக்கு மருத்துவர்கள் செய்த வைத்தியம் பயனற்றுக் கொண்டிருந்தது.

திடீரென்று அந்த யானை கீழே விழுந்தது.

விழுந்த யானை — இதுவரை அசைவற்றிருந்த யானை — விழுந்த நிலையிலிருந்தே மெல்ல மெல்ல ஊர்ந்து தன் கொட்டகையின் வாசற்புறத்திலிருந்த கல்தூணை முட்டித் தள்ளியது.

ஊர்ந்துவரும் யானை கொட்டகையைவிட்டு வெளியே வருவதற்கு இடைஞ்சலாக இருந்தது அந்தத் தூண்

சூப்பரின்டெண்ட் அந்தத் தூணை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்தச் செய்தார்.

தூண் அப்புறப்படுத்தப்பட்டதும், யானை அதன் வழியே மீண்டும் ஊர்ந்து வெளியே வந்தது. ஜனங்கள் எல்லாரும் சுற்றிநின்று பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள்.

இத்தனை நேரமும் அசைவற்று நின்று கொண்டிருந்த யானை, ஏன் அப்படிப் பிடிவாதமாக ஊர்ந்து வெளியே வருகிறது? எங்கே போகிறது?

யாருக்கும் புரியவில்லை. எல்லாரும் வியப்புடனும் கலவரத் துடனும் தடுமாறி ஊர்ந்து நகர்ந்து கொண்டிருக்கும் யானையைப் பார்த்துக் கொண்டிருக்கிறுர்கள்.

மெல்ல மெல்லப் புரண்டு உருண்டு நகர்ந்து சென்ற யானை, நேராகச் சுவாமியின்சந்நிதிதென்படும் இடத்துக்கு வந்தது, மிகச்சிரமப்பட்டு தன்கனத்த உடலைச் சுவாமிக்கு எதிராகத் திருப்பியது. தன் துதிக்கையை உயர்த்தியது. மறுகணம், அதன் உயிர் பிரிந்துவிட்டது.

'ஆ!' என்று கூடியிருந்த அத்தனை பேரும் மெய் சிலிர்த் தனர். தெய்வச் சந்நிதியைத் தேடிவந்து ஒரு வாயில்லாத ஜீவன் துதித்து உயிர் நீத்த இந்தச் சம்பவம் – நான்கே நான்கு வருடங்களுக்குமுன் – வைத்தீஸ்வரன் கோவிலில் பலரறிய நடந்திருக்கிறது.

ஃ ஃ ஃ ஃ

அப்படியே கண்கலங்க அந்த வைத்தியநாதனைத் தொழுது நிற்கிறோம்...

நான்கு யுகங்களுக்கும் ஒரு சத்தியப் பாலமாக நிற்கும் அந்த நாதனைத் தொழுது நிற்கிறோம்.

நான்கு வேதங்கள் – அங்காரகன் உள்ளிட்ட கோள்கள் அத்துடன் சூரியனும் அடங்கிய பிரபஞ்சமே தொழுதேற்ற துலங்கும் அந்தப் பெருமானை—

பறவையும் யானையும் பக்தியால் நம் தகுதியை உயர்த்தி மேம்பட்டு வணங்கிய ஈசனை –

எந்தத் தகுதியுமின்றி – இத்தரையில் நின்று தொழுது நிற்கிறோம்.

சத்தியச் சிறகடித்துப் பறந்துநின்று பூஜைசெய்யும் ஜடாயுவாகவும் நாம் பிறக்கவில்லையே... !

இறுதிவரை அவன் சந்நிதி கண்டு உயிர்விடுதலைப் பெற்ற யானையாகவும் பிறக்கும் பாக்கியமும் பெறவில்லையே... !

'பண்ணொன்ற இசைபாடும் அடியார்க்கு, மண்ணின்றி விண்ணையும் கொடுப்பான் இந்த மணிகண்டன்' என்றார் ஞான சம்பந்தர். ஐயோ நமக்கு அவ்வாறு செஞ்சொல் கவிபாடி எந்தையின் சிந்தை குளிர்விக்கவும் திறன் இல்லையே !

ஆனாலும் நமக்கு அவன் கருணையால்–

அவன் திருத்தலம் தேடி ஓடக் கால்கள் உண்டு;

அவன் மலரடி பற்றித் தொழக் கரங்கள் உண்டு;

அவனை நினைத்து உருக ஒரு நெஞ்சமுண்டு.

அவன் திருக்காட்சி கண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கக் கண்கள் உண்டு...

அனைத்துக்கும் மேலாக நம்மை அரவணைக்கவே வானுயர்ந்த அவன் அருள் உண்டு...

அப்புறமுமென்ன...

அழுவாய், தொழுவாய் நன்னெஞ்சே...

பேராயிரம் பரவி வானோரேத்தும் அந்தப் பெம்மானை –

தீரா நோய் தீர்த்தருள வல்லானை–

தீவினைக்கோர் மருந்தானானை–

அவன் திருப்புதல்வனைத் தினம் தினம் நினைந்து உருகுவாய்... !


அய்யனே என்று அழைத்திட்டால் அமிர்தமாய் அவனருள் பொங்கிடுமே !

முத்துக் குமரா என்றால் முவ்வினையும் தீர்ந்திடுமே !

தித்திக்கும் அருள் சுரக்கும் முத்தையா !

நீயன்றோ எங்கள் சொத்து ஐயா !

தருமையாதீனக் குருபூஜை விழாவின்போது
(ஆங்கிலமாதம் முதல் ஞாயிற்றுக்கிழமையில்)
6—6—82



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
சமயப் பயிற்சியாளர்கட்கும் அன்பர்கட்கும்
அருளுரை வழங்குதல்

திருவாவடுதுறை ஆதீனம் குருபூஜை விழா — கொலுக் காட்சியில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர்
திரு. சு. மெய்கண்டதேவன் ஐ. ஏ. எஸ். அவர்கட்குப்
பொன்னாடை போர்த்தி ஆசியருளல்

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜை விழாவில்

(13–6–82)



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
பக்தர்கள் புடைசூழப்
பட்டினப்பிரவேசத்திற்கு எழுந்தருளல்

தருமையாதீனக் குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்,
பக்தர்கள் உடன்வர, பட்டினப்பிரவேசமாக,
சிவிகையில் திருவீதியுலா வருதல்

13—6—82

தருமையாதீனக் குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள்
பிர்மஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரி அவர்களுக்குப்
பொன்னாடை போர்த்தியருளல்

திருக்கொள்ளம்பூதூர், திருவிடைவாய்த் தலச்சிறப்புக்கள்

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருவாசக உரைமணி,

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ..

1. திருக்கொள்ளம்பூதூர்

தஞ்சைமாவட்டம் நன்னிலம் வட்டத்தில் தஞ்சை – நாகூர் புகைவண்டித் தொடரில், கொரடாச்சேரி இரயில் நிலையத்தி லிருந்து வடக்கே குடவாசல்வரும் வழியில் 8 கி. மீ. தூரத்தில் செல லூருக்கு அருகில் இத்தலம் அமைந்துள்ளது. கொரடாச் சேரியிலிருந்து குடவாசல் செல்லும் பேருந்துகளில் ஏறிச் செல்லூரில் இறங்கி மேற்கே 1½ கி. மீ. தூரம் சென்ருல் இத் தலத்தை அடையலாம்.

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்களில் 113 வது தலம். அழகிய சிறிய கிராமம். வெட்டாறு எனப்படும் முள்ளி யாறு ஊருக்கு அருகில் மேற்கே ஓடுகிறது. இவ்வாறு அகத்திய காவேரி எனப்படும். இவ்வாற்றில்தான் வெள்ளக்காலத்தில் திருஞானசம்பந்தர் அடியவர்குழாங்களோடு ஓடத்தில் ஏறித் திருப்பதிகம்பாடி நாவலமே கோலாகக் கொண்டு அவ்வோடத் தைக் கரைசேர்த்த அற்புதம்நிகழ்ந்தது. ஆற்றுக்கு அக்கரையில் நம்பர் கோயில் உள்ளது.

திருக்குடவாயில், திருவிடைவாய் இத்தலத்துக்கு அருகி லுள்ள தலங்களாகும்.

கூவிளம் என்பதற்கு வில்வம் என்பது பொருள். இத்தலம் பண்டைகாலத்தில் வில்வவனமாக விளங்கியதால் கூவிளவனம் எனப்பட்டது. கூவிளம்புதூர் – கொள்ளம்பூதூர் என மருவி வழங்குகிறது. இத்தலத்துக்கு யுகத்துக்கு ஒன்ருக வழங்கிய வில்வவனம், பிரமவனம், பஞ்சாக்கரபுரம், காண்டீபவனம் என்னும் பெயர்கள் உள்ளன.

கோயிலமைப்பு :

கிழக்குநோக்கிய திருக்கோயில். நாட்டுக்கோட்டை நகரத்தாருள் நச்சாந்துபட்டி இராமன் செட்டியாரும், இலட்சுமணஞ் செட்டியாரும் பெரும் பொருட் செலவில் கருங்கல் திருப்பணியாக இத்திருக்கோயிலைத் திருப்பணி புரிந்துள்ளனர். இரண்டு பிராகாரங்கள் உள்ளன. திருக்கோயிலுக்கு முன்னால் பிரம தீர்த்தம் உள்ளது. கட்டைக்கோபுர வாயிலில் விநாயகர்,முருகன் சந்நிதிகள் உள்ளன. இரண்டாம் கோபுரம் ஐந்து நிலைகளுடன் விளங்குகிறது. வாயிலில் பொய்யாத விநாயகர் தண்டபாணி சந்நிதிகள் உள்ளன. கோபுரவாயிலைக் கடந்து உள்ளே சென்றால் முதற்பிராகாரம். தென்புறம் — திருமடைப்பள்ளி, நால்வர்சந்நிதி, ஆதிவில்வநாதர், மேற்புறம்-வலம்புரி விநாயகர் சோமாஸ்கந்தர், கஜமுத்தீசுவரர், பஞ்சலிங்கம், முருகப் பெருமான் கஜலக்ஷ்மி சந்நிதிகளும், வடபுறம் பைரவர் சந்நிதி பள்ளியறை ஆகியனவும் கிழக்கே நவக்கிரகங்களும் உள்ளன.

கருப்பக்கிருக மண்டபத்தில் மூலவர் ஸ்ரீ வில்வாரண்யேசுரர் விளங்குகிறார். மகாமண்டபத்தில் உற்சவமூர்த்திகள் நடராசர் திருஞானசம்பந்தர் உள்ளனர். முன்மண்டபத்தில் அம்மன் சந்நிதி உள்ளது தெற்குநோக்கி விளங்குகிறார். சந்நிதியில் திருப்பணி செய்வித்த செட்டியார் குடும்பத்தினரின் உருவச் சிலைகள் உள்ளன. வெளிப்பிராகாரத்தில் மகாலக்ஷுமிகோயில் உள்ளது.

மூர்த்திகள் :

இத்திருத்தலத்தில் விளங்கும் விநாயகருக்குப் பொய்யாத விநாயகர் எனப்பெயர். வலம்புரி விநாயகர் சந்நிதி விசேடம். இறைவன் திருப்பெயர் — அருள்மிகு வில்வாரண்யேசுவரர். அம்பிகை திருப்பெயர் அருள்மிகு சௌந்தரநாயகி. தமிழில் அழகியநாச்சியார் என வழங்கப்பெறுகிறார். முள்ளியாற்றின் அக்கரையில் திருஞானசம்பந்தர் கோயில் உள்ளது. திருஞான சம்பந்தர்சந்நிதி விசேடம். தீர்த்தம் — பிரமதீர்த்தம், அருச்சுன தீர்த்தம், அகத்திய தீர்த்தம் வெட்டாறு முதலியன. தலமரம் வில்வம்.

திருஞானசம்பந்தர் ஓடம் செலுத்திய அற்புதம் :

திருஞானசம்பந்தர் பாண்டியநாட்டில் சைவசமயத்தை நிலை நிறுத்தி மீண்டும் சோழ நாட்டிற்கு எழுந்தருளியபோது திருப்

பாதாளீச்சரம் முதலான தலங்களை வணங்கிக்கொண்டு திருக்கொள்ளம்பூதூருக்கு எழுந்தருளினர். முள்ளியாற்றில் (வெட்டாறு) வெள்ளப்பெருக்கின் காரணமாக ஓடக்காரர்கள் ஓடங்களைச் செலுத்த முடியாமல் அவற்றைக் கரையில் கட்டிவிட்டுச் சென்றுவிட்டனர். ஞானசம்பந்தர் கரையில் கட்டியிருந்த ஓடம் ஒன்றை அவிழ்க்கச்செய்து அடியவர்களோடு அதன்மீது ஏறிக்கொண்டு தமது நாவையே ஓடக்கோலாகக் கொண்டு "கொட்டமே கமழும்" என்னும் திருப்பதிகம் பாடினர். பெருமான் அருளால் ஓடம் மறுகரையை அடைந்தது. சிவபெருமான் உமையம்மையோடு காட்சிதரத் தரிசித்துக் கொள்ளம்பூதூர்க் கோயிலை அடைந்து திருப்பதிகத்தை நிறைவுசெய்து வழிபட்டு அப்பதியில் தங்கியருளினர்.

ஓடத்திருவிழா ஆண்டுதோறும் ஐதிக விழாவாக ஐப்பசி அமாவாசைக்கு மறுநாள் நிகழ்கின்றது.

புராண வரலாறுகள் :

படைப்புத்தொழிலைப் பெறவேண்டிப் பிரமன் இத்தலத்தில் தங்கித் தன்பெயரால் தீர்த்தம் உண்டாக்கிச் சிவலிங்கப் பெருமானைத் திருக்கோயில் எடுத்து வழிபட்டு இறைவனருளால் நல்வரங்கள் பலவும் பெற்றான்.

அகத்தியர் இறைவனது திருமணக் கோலத்தைத் தரிசிக்க விரும்பி இத்தலத்தை அடைந்து வழிபாடாற்றியபோது இறைவன் உமையம்மையுடன் தனது திருமணக் கோலத்தை இத்தலத்தில் காட்டியருளினர். இங்குள்ள தீர்த்தம் ஒன்றும் ஆறொன்றும் அகத்தியர் பெயரால் வழங்குகின்றன.

அருச்சுனன் பாசுபதக்கணை பெறவேண்டி இத்திருத்தலத்தை அடைந்து தவம்செய்தான். இறைவன் திருவிளையாடல் பல புரிந்து முடிவில் அருச்சுனனுக்கு இத்தலத்தில் பாசுபதக்கணை அருளினர். இங்குள்ளவனம் காண்டீபவனம் என்றும் தீர்த்தம் ஒன்று அருச்சுன தீர்த்தம் எனவும் வழங்கப்படுகிறது.

வேடன் ஒருவன் சிவராத்திரியன்று களவாடவந்து இரவு முழுதும் கண்விழித்திருந்தமையால் அரசுதண்டனையால் அவன் இறக்கும்போது இறைவன் காட்சிதந்து அவனுக்குப் பரமுத்தி அளித்தார்.

அந்தணன் ஒருவன் பழவினை வயத்தால் பன்றியாய்ப் பிறந்து இத்தலத்திலுள்ள அகத்திய தீர்த்தத்தில் மூழ்கியதால் தேவ வடிவத்துடன் நற்கதி உற்றான்.

கல்வெட்டு :

இவ்வூர்க் கோயிலில் மூன்றாங் குலோத்துங்க சோழன், மூன்றும் இராசராசசோழன் இவர்கள் காலங்களில் ஏற்பட்ட கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இறைவர் திருக்கொள்ளம்பூதூருடையார், இறைவியார் அழகியநாச்சியார் என்னும் பெயர்களால் கூறப்பெற்றுள்ளனர்.

இக்கோயிலில் குளங்கண்ட மகாதேவர், இவரதுநாச்சியார் நீரளித்தமென்முலையம்மை; ஆட்கொண்டநாயகதேவர் இவரது நாச்சியார்; அவிமுத்தீஸ்வரமுடையார், இவரது நாச்சியார்; இவர்களுக்கு வழிபாட்டிற்குப் பல்வூர்களில் நிலங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த இத்திருமேனிகளில் நீரளித்த மென்முலைநாச்சியாரை இக்கோயிலில் எழுந்தருளுவித்தவன் பெருமுர் உடையான் சங்கரனாகிய அமரக்கோன் ஆவ்ன்.

இக்கோயிலில் எழுந்தருளுவிக்கப்பெற்ற திருநீலகண்டத்துப் பாணனுர்க்கு வழிபாட்டிற்கு நிலம் அளிக்கப்பெற்ற செய்தியை மூன்றாங் குலோத்துங்க சோழன் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இவ்வூர் அருமொழித்தேவ வளநாட்டுச் செல்லூர்க் கூற்றத்திற்கு உட்பட்டிருந்தது.

அம்பாள்பெயர் வரும் கல்வெட்டுப் பகுதி:- திருபுவன வீர தேவர்க்கு யாண்டு 30 சயங்கொண்ட சோழமண்டலத்துக் காட்டூர்க்கோட்டத்து, காக்கனூர் நாட்டுப் பெத்தூர் மாம்பாக் கிழான் அரையன் தில்லைநாயகனான சிங்களராயன், அருமொழி தேவ வளநாட்டுச் செற்றூர்க் கூற்றத்து உடையார் திருக்கொள்ளம்புதூர் உடையார்க்கு நான்வைத்த திருநுந்தாவிளக்கு ஒன்றும், இக்கோயில் திருக்காமக் கோட்டமுடைய அழகிய நாச்சியார்க்கு வைத்த திருநுந்தாவிளக்கு ஒன்றும் ஆக இரண்டும் ...... என்பதாகும்.

கொட்ட மேகமழுங் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல வுந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

கொன்றைசேர் சடையான் கொள்ளம்பூதூர்
நன்று காழியுள் ஞானசம் பந்தன்
இன்றுசொன் மாலைகொண் டேத்தவல் லார்போய்
என்றும் வானவ ரோடிருப் பாரே.

2. திருவிடைவாய்

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற தலங்கள் 274 என இது வரை கணக்கிடப்பெற்றிருந்தது. 1917 ஆம் ஆண்டு கல்வெட்டு ஆராய்ச்சியில் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றபிறிதொரு தலம் உள்ளதெனக் கண்டுபிடிக்கப்பட்டது. அத்தலம்தான் திருஇடைவாய். இது இடவை என மருவியும் வழங்குகிறது. அப்பர் தேவாரத்தில் இடம்பெற்ற வைப்புத் தலமாகக் கருதப் பெற்றுவந்த திருவிடைவாய், திருப்பதிகம்பெற்ற தலமாகவும் விளங்கத் தொடங்கியது.

தஞ்சைமாவட்டம் கொடராச்சேரி வெண்ணாற்றங்கரையில் இத்தலம் உள்ளது. கொரடாச்சேரியிலிருந்து கூத்தாநல்லூர் செல்லும் வழியில் வெண்ணேவாயில் என வழங்கும் வெண்ணாற்றுப் பாலத்திற்கு அருகில் திருவிடைவாயில் செல்லும் வழி என்னும் கைகாட்டி வழியே கிழக்கில் 1½ கி. மீ. சென்றால் இத் தலத்தை அடையலாம்.

கோயிலமைப்பு :

கிழக்கு நோக்கிய சந்நிதி. அழகிய சிறிய திருக்கோயில். புதிய திருப்பணி. ஒரே பிராகாரம் மட்டும் உள்ளது. கட்டைக் கோபுர வாயிலைக்கடந்து உள்ளே சென்றால்நந்தி பலிபீடங்கள். கன்னிமூலையில் விநாயகர். வாயுமூலையில் முருகன் கஜலக்ஷ்மி சந்நிதிகள். கிழக்கே ஐயனர், நவக்கிரகங்கள், வைரவர், சந்திர சூரியர் உள்ளனர். தெற்குப்பிராகாரத்தில் மண்டபச் சுவரில் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட இத்தலத் திருப்பதிகக் கல் வெட்டைக் காணலாம். அடுத்து நர்த்தனவிநாயகர், தக்ஷிணு மூர்த்தி விளங்குகின்றனர். மேற்கே இலிங்கோத்பவர். வடக்கே பிர்மா துர்க்கை தனிக்கோயில். சண்டிகேசுவரர் உள்ளனர். மகாமண்டபம் அம்பாள் திருக்கோயிலை இணைத்துள்ளது. நால்வர் சந்நிதியில் தலத்திருப்பதிகக் கல்வெட்டு உள்ளது. அம்பாள் தெற்கு நோக்கி உள்ளார். சுவாமி கருவறையில் விளங்குகிறார்.

மூர்த்திகள் :

இறைவன் திருப்பெயர் அருள்மிகு புண்ணியகோடிநாதர் இடைவாய்நாதர் எனத் தமிழில் வழங்கப்பெறுகிறார். அம்பாள் திருப்பெயர் அருள்மிகு அபிராமியம்மை. தீர்த்தம் – புண்ணிய கோடி தீர்த்தம். தலமரம் – வில்வம். ஐயடிகள் காடவர்கோன் நாயனர் அருளிய க்ஷேத்திரக்கோவை வெண்பா ஒன்றும் இத்தலத்திற்குள்ளது.

ஞானப்பிரகாசமாலை

புலவர். திரு. மு. வைத்தியநாதன்

திருச்சிராப்பள்ளி

முன்னுரை :—

தருமையாதீன ஆதிகுருமுதல்வராகிய ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் தமிழ்மொழிக்கு வழங்கிய அருட்கொடையாம் அட்ட கங்களில் ஒன்று ஞானப்பிரகாசமாலை.

சோழ நாட்டிலிருந்து பாண்டிய நாடு சென்று சிவம் பெருக்கிய திருஞானசம்பந்தர் பெருமானைப்போல, பாண்டிய நாட்டிலிருந்து சோழ நாடு புகுந்து ஞானத்தவம் பெருக்கியவர் குருஞானசம்பந்தர்.

அகவை பதினாறில் ஊனசம்பந்தம் விட்டு, அருள் ஞானம் விரும்பிய குருஞானசம்பந்தர், ஆலவாய் அழகன் அருளால் திருவாரூர் வந்து, சித்தீச்சரத்தில் தென்முகப் பெருமான் திரு முன்பு, சோமவாரநாளில், தன்னை ஆண்டுகொண்டருளிய கமலை ஞானப்பிரகாச தேசிகரின், ஞானப்பெருநிலையைப் பாராட்டிப்பாடிய முப்பத்தாறு பாடல்களையுடைய அருட் பனுவல் ஞானப்பிரகாசமாலை.

அறிவுரை :

ஸ்ரீ குருஞானசம்பந்தர், தன் அருள்ஞான வள்ளலாகிய கமலை ஞானடபிரகாச முனிவரின்பெருமையை நெஞ்சறிவுறுத்த லாகக் கூறி மகிழ்ந்துள்ளார்.

நெஞ்சமே! நீ ஒன்றை நினைவில்வைக்கவேண்டும். அது என்ன தெரியுமா? திருவளர் கமலைவாழ் ஞானப்பிரகாசர் திருவடியை என்றும் மறவாது வணங்குதலாகும்.

அவரைவணங்கும் அடியார் உள்ள இடம்தேடி இயமன் வருவதில்லை; வெண்டாமரை மலர் மீதிருக்கும் பிரமன் அவ்வடி யார்களை மீண்டும் கருவில் இடுவதில்லை; எனவே, ஞானப் பிரகாசரின் அடியார்கட்கு இறப்பும் இல்லை; பிறப்பும் இல்லை;

ஆனுல், பரானந்த வாழ்வு உறுதியாக உண்டு. நீ சுகமாகவாழ விரும்பினுல், இதைக் கருத்தில்கொண்டு அவர் திருவடியை வணங்குவாய் என்று அறிவுரை கூறியுள்ளார். இதனே,

“ திருவார் கமலேயுள் ஞானப்பிரகாசன் திருவடிக்கீழ்
வருவார் அவர்வழி வாரான்சமனும்; மலரயனும்
கருவாய் இடுவதற்கு எண்ணுன் எந்நாளும் கருத்தினில் நீ
வெருவாய்; சுகந்தனில் வாழ்வாய்; பரானந்தம் மேவிடுமே”

என்று பாடி மகிழ்ந்துள்ளார்.

முத்திக்கொடி :

கமலேயில்வாழும் ஞானப்பிரகாசர், ஓர் அற்புதமான முத்திக் கொடி உயர்த்தியுள்ளார். அக்கொடி அருள்ஞானம் ஊட்டி முத்திப்பேறு அளிக்கக்கூடியது. உலகவாழ்வில் அலமந்து, உழன்று, தாழ்ந்து, மேலும் கெடும் உல்கவர்களே! நீங்கள் உடனே செய்யவேண்டியது ஒன்றுஉண்டு. பலர் பலவாறு கூறும் மயக்கம்தரும் நெறிகளே விடுங்கள். ஞானப்பிரகாச தேசிகனின் திருவடிகளாம் அருட்டாமரை மலர்களேப் பணிந்து போற்றுங்கள். இவ்வாறு செய்தால் சிவப்பேறு சித்திக்கும் என்கிருர்.

ஞானப்பிரகாசர் அடியவர் :

பிறவி கொடுமையானது, பிறப்பற்றநிலேயே பேரின்ப நிலே யாகும். அந்நிலே வேண்டுமா? எளிய வழியொன்று உண்டு. மற்றீண்டு வாரா நெறியாம் பேராவியற்கைநிலே வேண்டுமா? அதை அடைய நீங்கள் காட்டிற்குச் செல்லவேண்டாம்; கடுந் தவம் புரியவேண்டாம்; மலேமீதிருந்து மாதவம் செய்யவேண் டாம்; கொடிய கானலில் கடுவிரதம் மேற்கொள்ளவேண்டாம். ஒன்றைமட்டும் செய்யுங்கள்! ‘கமலே வாழ் ஞானப்பிரகாச தேசிகரின் அடியவர் இவர்’ என்று உலகவர் கூறும்படியாக நடந்துகொள்ளுங்கள் ; அதுபோதும். பிறப்பறுக்கும் பேறு கிட்டும்.

“ காரே சுமந்து கிரிமீதுநின்று கடுங்கனலில்
நேரே அருந்தவம் செய்வீர்! கமலேயன் நெஞ்சில்அன்பர்
ஆரேனும் ஆள்பவன், ‘ஞானப்பிரகாசன் அடியர்’ என்னும்
பேரே படைமின் அதுபோதும் போதும் பிறப்பறவே ”

என்பது அவர் திருவாக்கு.

ஞானப்பிரகாச மந்திரம் :

எனக்குத் தெரிந்த ஒருவாசகம் 'ஞானப்பிரகாசம்' என்னும் திருவாசகம் ஆகும். அடியனுகிய என் பற்றுக்கோடு அதுவே யாகும். நீண்ட வாழ்நாள், பொருட்செல்வம், மண்ணரசு போன்ற எதனையும் நான்விரும்பமாட்டேன். நிலத்தில்கிடக்கும் போதும் 'ஞானப்பிரகாசர்' என்றுதான் கூறுவேன். கிடந்து எழுந்து நடக்கும்போதும் 'ஞானப்பிரகாசர்' என்றுதான் கூறுவேன். பசி, பிணி முதலிய உடல்நோய்கள் வந்து பற்றிஞலும் 'ஞானப்பிரகாசர்' என்பேன். காலன் என்னும் கண்ணிலி வந்து அழைத்தாலும் 'ஞானப்பிரகாசர்' என்பேன். என்பெரும் பெயர் மந்திரம், என் குருநாதர் திருப்பெயரேயாகும் என்று விளக்கி,

'கிடந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்; கிடந்தே எழுந்து
படர்ந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்; பசியோடு பிணி
அடர்ந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்; அந்த அந்தகனுர்
தொடர்ந்தாலும் ஞானப்பிரகாசன் என்பேன்;பினைசொல்
[இல்லையே''

என்று பாடிப்பரவுகின்ருர்.

முப்பொருளியல்பு :

எம்பெருமானும் சிவபிரானுக்கும் என் குருநாதருக்கும் எந்த வேறுபாடும் இல்லை. 'குருவே சிவமாம்' என்னும் துணிபு உடையவன் யான். கவுளியமார்க்கம் கலந்து அழித்தவனும் கமலாலயத்தில் உள்ளவனும், குதிரையை நரியாக மாற்றியவனும், இசைப்பாணனுகிய பாணபத்திரனுக்கு அருள்செய்தவனுமாகிய எம்பெருமானின் அருட்தன்மையுடைய என் குருநாதர் ஞானப்பிரகாசர் எழுந்தருளியுள்ள மடத்தில்வாழும் பல்லிகள் கூட கேள்விஞானம் காரணமாகப், பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளை விளக்கமாகக் கூறும் பழக்கவழி அறிவு உடையவை என்பதை அறிவாய்.

பிராசாதயோகநிலை :

என்குருநாதர், சின்முத்திரைகாட்டி, மௌனமாகச்சொன்ன அருளுபதேசத்தைக் கேட்ட அன்று முதலே, மூச்சு ஒடுங்கும் பிராசாதயோகநிலை எனக்குக் கைகூடியது. உடம்பின் வழிப்பட்ட சுகம் மறந்து, உள்ளம் அமைதிச்சுகத்தில் திளைத்தது. அவர் அருளுபதேசம், வானப்பிரகாசநேயம் வழங்கியது என்று தெரிவித்து மகிழ்கின்ருர்.

பேரின்ப நிலை :

ஒன்றுமட்டும் உறுதியாக எனக்குத் தெரிகிறது. என் குருநாதர் அருள்காரணமாகப் பிறக்கும்நிலை இனிமேல் எனக்கு இல்லை. தற்பொழுது உலகவாழ்வுபற்றிய கவலை எனக்குச் சிறிதும் இல்லை. என்னை யார் பகைத்து எழுந்தாலும், அல்லது நகைத்துப் பேசினாலும், அதனால், எனக்கு ஆகப்போவது எதுவும் இல்லை. ஞானப்பிரகாச வள்ளல், என் உள்ளத்தில் நீங்காது இருந்து, சிவானுபவம் அருளிக் கொண்டிருப்பதால், உறுதியாகப் பிறவிப்பிணி இல்லை. உள்ளபேரின்ப நிலையும் நீங்காது என்று தான்பெற்ற உயர்நிலையை விளக்கியுள்ளார்.

“ ஆரார் பகைக்கினும் ஆரார் நகைக்கினும் ஆவதென்ன ?
சீரார்கமலையுள் ஞானப்பிரகாசன் என்சிந்தையுள்ளே
பேராதிருந்து சிவானுபவம்தரப் பெற்றதினால்
வாராது சென்மமும் போகாது பேரின்பவாரியுமே ”

என்பது அவர் துணிபு.

உயர்வும் தாழ்வும் :

பெருமானே ! ஒருபொன் பதினாயிரம் மாற்று மதிப்புடைய விலையுயர்ந்த மாலையினை நீ அணிந்துள்ளாய். அற்பமான கற்களையும் எலும்புகளையும் இறகுகளையும் நீ அணிந்துள்ளாய். உன்னை அன்பே வடிவான உள்ளத்து அடியார்களும் பாடிப் பரவியுள்ளனர். இவைகளை எல்லாம் விருப்பமுடன் ஏற்ற நீ என்னுடைய அன்பில்லாத புன் சொற்களையும் கேட்டருள வேண்டும் என்று இறையடியார் பெருமையினை நினைந்து போற்றித் தம்மைச் சிறுமைப்படுத்திக் கொண்டு பாடியுள்ளார்.

திருவடி விருப்பு :

கமலைவாழ் குருநாதனே ! தவமுனிவோர்கள் வாழ்த்தும் தயாநிதியே ! என் உள்ளம் விழைவது உன்திருவடி இன்பத்தில் திளைத்திருப்பதேயாகும். வானத்தில் எழுந்துவரும் கரியமேகங் களைக் கண்டபோது, மனம்களிப்படைந்து ஆடும் மயில்போல, உன் மலர்பாதங்கண்டு மகிழ்ந்திட விரும்புகின்றேன். அந்நாள் என்றுவருமோ? என்று தன் ஆர்வத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

பிரிவு வேண்டாம் :

அளவற்ற வேதனைதரும் இந்த ஊனுடலைவிட்டு உன்னை யடைந்து திருவருள் இன்பம்பெற ஆசைப்பட்டேன். ஆனால், தாங்கள், ‘தருமையிலிருந்து சைவ பரிபாலனம் செய்க குருவாரந்தோறும் வந்து காண்க’ என்று கூறி, மாற்றிய அந்த

வாக்கிற்கு அஞ்சி வாழ்ந்து வருகின்றேன். தங்களைப்பிரிந்து வாழும் விருப்பம் இல்லை என்று பிரிவுநினைந்து கலங்கியுள்ளார்.

உறுதிப்பாடு :

'நம் தருமைச் சம்பந்தன்' என்று தாங்கள் கூறும் சொற் கேட்டு மகிழ்வேன். எனக்குத் தந்தையும், தாயும், தமர்களும், செல்வமும், உயிரின்உயிராம் இறைவனும் ஆகியயாவும் தங்கள் திருவடிகளே என்று தன் உறுதிப்பாட்டைப் புலப்படுத்தி யுள்ளார்.

முடிவுரை :

இவைகளால், கமலை வாழ் ஞானப்பிரகாச தேசிகர்மீது, அவர் நன் மாணவராம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் கொண்டிருந்த மனங்கனிந்த ஈடுபாட்டை உணரலாம்.

கட்டுரை எண். 27

அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A., D. U. N., I. U.

ஏத்தும் அடியவர் ஈரேழ் உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம் கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல் அணங்கே மணம்நாறும்நின் தாள்
[இணைக்குஎன்
நாத்தங்கு புன்மொழி ஏறியவாறு நகையுடைத்தே. 26

அ. கமழ் பூங்கடம்பு சாத்தும் குழல் அணங்கே!

(1) "மணங்கமழும் கடப்பமலரினை அணிகின்ற அபிராமி தேவியே!" என அழைக்கிறார்.

(2) கடம்பமலரினை அன்னை விரும்பி அணிகின்றாள். "கதம்பகுஸுமப்ரியா - கடம்பமலரில் விருப்பமுள்ளவள் என சகஸ்ரநாமம் புகழுகிறது.

(3) அதே கடப்பமலரின் கொத்தைக் காதில் 'செவிப்பூ' வாகவும் அணிகிறாள் என்பதை சகஸ்ரநாமம் "கதம்ப மஞ்சரி க்லுப்த கர்ணபூர மனோகரா" என வருணிக்கிறது. அதாவது கடம்பமலரின் கொத்தினை விரும்பிக் காதில் செவிப்பூவாக மிக நேர்த்தியாகச் சூட்டிக்கொள்கிறாள் என்கிறது.

(4) அவளது ஸ்ரீபுரத்தைச்சுற்றி அமைந்திருக்கும் பல வனங்களுள் கடம்பவனமும் ஒன்று. இப்பூவுலகிலும் கடம்ப வனம் என்னும் மதுரையம்பதியினை விரும்பி அவள் உறைகிறாள்.

ஆ. ஏத்தும் அடியவர்.... ......திரிபவராம்

(1) உன்னைப் போற்றித்துதிக்கும் அடியவர்கள் பதினான்கு உலகினையும் படைத்துக் காத்து அழிக்கும் தொழிலினை நடத்தித் திரிபவர்கள் ஆவார்கள்.

(2) படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் களையும் புரியும் மும்மூர்த்திகளான பிரமன், திருமால், உருத்திரன்

ஆகியவர்கள் உன்னைப் போற்றித் துதிக்கும் அடியவர்கள். முத்தொழில் புரியும் முதல் மூவர்களாகிய அவர்களே நின்னை ஏத்தும் அடியவர்கள் ஆனதினாலேயே அவர்கள் இயற்றும் அத்தொழில்களில் ஆற்றல் உடையவர்கள் ஆனார்கள்.

(3) முத்தொழிலையும் புரிபவர் சிவபெருமானே ஆவார். படைக்கும்பொழுது அவர் 'பவன்' எனவும், காக்கும்பொழுது 'ம்ருடன்' எனவும், அழிக்கும்பொழுது 'ஹரன்' எனவும் அழைக்கப்படுகிறார்.

ஆகவே முத்தொழில் இயற்றும் முதல்வராகிய சிவபெருமானும் நின்னைத் துதித்துப் போற்றும் அடியவர் ஆவார். அம்பிகை வழிபாட்டினை முதலில் வழங்கியவரே சிவபெருமான்தான் என்பதனை முன்னரே கண்டோம். 'சரியாநந்தநாதர்' என்ற தீட்சாநாமத்துடன் சாக்த உலகில் அவர் குறிப்பிடப்படுவார்.

(3-A) அவர் முத்தொழில் இயற்றும்பொழுதும் தனது விருப்பப்படி, வேறு எவருக்கும் கட்டுப்படவும், பதில்சொல்லவும் வேண்டிய அவசியமின்றிச் சுதந்திரமாக அவற்றினை இயற்றுகின்றார்.

தன்னிச்சைப்படிசெயல்படுவதே இறைவனின் எண்குணங்களில் ஒன்றாகும். அதனையே 'சித்தம் போக்கு சிவம் போக்கு' என்பர்.

சித்தம் போக்கு சிவம் போக்காக, சிவபெருமான் முத்தொழிலில் செயல்படுவதால் 'படைத்தும் காத்தும் அழித்தும் திரிபவர்' எனக் குறித்தார். 'திரிதல்' என்பது குறிக்கோளின்றி அலைதல் எனப் பொருள்படாது, சிவபெருமானின் சுதந்திரச்செயல்பாட்டினையே குறிக்கும்.

(4) நின் புகழினை ஏத்தும் அடியவர்கள் முத்தொழிலியற்றும் பதவிகளையும் எய்துகின்றனர் எனவும் பொருள்கொள்வர்.

(5) நின்னை ஏத்தும் அடியவர்கள் பதினான்கு உலகினையும் படைத்துக் காத்து அழிக்கும் சகலவல்லமைபடைத்த சித்திகளைகளை எய்திய சித்தர்பெருமான்கள் ஆவார்கள்.

இங்கு உரையாசிரியர் திரு. முருகவேள் அவர்கள் "படங்கொள்பாயும் பூவணையும் தருவாய் மதுரைப் பரமேட்டி" என்ற பரஞ்சோதியார் அடிகளையும், "எம்பிரான் அருள்மேவில் ஒரு துரும்பும் படைத்து அழிக்கும் அகிலாண்டத் தொகுதியையே" என்ற குமரகுருபரரின் அடிகளையும் எடுத்துக்காட்டி அடியவர் முத்தொழிலில் ஆற்றல் எய்துதலை விளக்குகிறார்.

(5 – A) அத்தகைய ஆற்றல்பெற்ற சித்தர்பெருமான்கள் ஓரிடம்தங்காது ஒற்றைத்துகிலோடு உலகெங்கும் சுற்றித்திரியும் இயல்பினர் ஆதலைத் திரிபவராம் என்ற சொல் குறிக்கிறது.

(6) 'வந்திப்பவர் உன்னை வானவர் தானவர்' என்ற அபிராமி பட்டரின் கருத்துப்படி அசுரர்களில் பலர் அத்தகைய படைத்துக் காத்து அழிக்கும் ஆற்றல் பெற்றுத் திரிந்து பின்னர் நற்கதிபெற்ற வரலாறுகளும் உண்டு.

(7) சிங்கை நமச்சிவாயரின் பாவநாசம் உலகம்மை கலித் துறை அந்தாதி ஐந்தொழிலினையும் அன்னையின் கடைக்கண் பார்வையால் இயற்றுகின்றனர் எனக் குறிப்பிடுகிறது.

" படைப்பார் ஒருவர், அளிப்பார் ஒருவர் அப்பால் ஒருவர்
துடைப்பார் பிறகு தொழில் வேறிரண்டு தொகுத்து வகுத்து
அடைப்பார் இருவர் எனத் திரிவார் உலகம்ம! மற்றுன்
கடைப் பார்வை செய்கின்ற தொன்றுல் ஐந்தாதிக்
[கக்காரருமே "

இப் பாடலிலும் 'திரிவார்' என்ற என்ற சொல்லினை ஆண்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

" மணியும் தரளமும் வெண்ணகையோ, வழி மூவர் செயத்
துணியும் தொழிலும் உன் தொழிலோ.பத்தி துத்தி முடிப்
பணியும் சுட்ரும் கடல் ஏழும் நின் கழல் பங்கயத்தில்
அணியும் திருவுருவே ! மதுராபுரி அம்பிகையே "

என்னும் குலசேகரபாண்டியனின் மதுராபுரி அம்பிகைமாலையும் முத்தொழிலையும் மூவர்க்கும் அருள்பவள் எனப் புகழுகிறது.

இ. மணம் நாறும் நின் .... நகையுடைத்தே.

(1) மணங்கமழும் நினது திருவடித் தாமரைகளில் எளியேனது இவ்வந்தாதியாகிய மொழிகள் ஏற்றுக்கொள்ளப்படுவது நகைப்புக்குரியது.

(2) பல நன்மணங்கள் கமழும் தோத்திரங்களும் புகழ்ச்சிகளும் பெற்ற அவளது திருவடித் தாமரையில் தனது புன்மொழியும் ஏறியது சிரிப்புக்குரியது என்கிறுர். பல அடியவர்களின் புகழ்ச்சியாலும் தொண்டாலும் அவளது திருவடியில் பல நறுமணங்கள் வீசுகின்றன.

(3) வேதங்கள் அவளது திருவடியினைப் போற்றித் துதிப்பதால் அவள் திருவடிகளில் வேதமணம் அல்லது மறையின் பரிமளம் வீசுகிறது.

(3-A) “அடிவேதநாலுஞ் சிறப்பார்ந்த வேதமனைத்தினுக்கும் முடிவே!” என்ற கம்பனின் சரசுவதியந்தாதிப் பாடல் அவ்வாறு வேதமணங்கமழுதலைக் குறிப்பிடுகிறது.

(4) சிவபெருமானும் சிவனடியார்களும் போற்றுவதால் ‘சிவமணம்’ அல்லது ‘சைவமணம்’ கமழுகிறது.

(5) பல பாமாலைகளும், அந்தாதிகளும், பிள்ளைத்தமிழ்களும் போற்றிப் புகழ்வதால் அவள் தாளிணையில் தமிழ்மணம் கமழுகிறது.

(6) சாமவேதம் தொடங்கி, தீட்சிதர் க்ருதிகள் உள்ளிட்ட பல இசைமாலைகள் அணிவதால் அவளது திருவடியில் இசைமணம் வீசுகிறது.

(7) “திங்கட்பகவின் மணம் நாறும் சீரடி” எனப் பின்னர் கூறுவார். இறைவன் ஊடற் காலத்தில் திருவடியினைச் சூடுவதால் திங்களின மணம் கமழுகிறது.

(7-A) இறைவன் சூடும் கொன்றையின் மணமும் கமழுகிறது.

(8) இந்திராதி தேவர்கள் அர்ச்சிக்கும் கற்பகம் முதலான வானுலக மலர்களின் மணம் கமழுகிறது.

(9) இப் பூவுலகில் திருக்கடவூரில் அர்ச்சனைக்கு மார்கண்டேயர் ஆகாசகங்கையுடன் கொணர்ந்த ‘பிஞ்சிலம்’ என்னும் ஜாதிமுல்லையின் மணம் வீசுகிறது.

(இன்றும் இஃது ஆண்டு முழுதும் மலர்கிறது. அபிராமி அம்மைக்கு அணிவிக்கப்படுகிறது).

(10) கடவூரில் காலனை உதைத்த இடது திருவடி அன்னைக்குரியதே என்ற ‘புகழ்மணம்’ எங்கும் வீசுகிறது.

(11) திருக்கடவூரின் கண் வாழ்ந்த கலய நாயனரின் குங்குலியத் தூபத்தின் நறுமணம் கமழ்ந்த சிறப்புடையது அவரது தாள் இணைகள் ஆகும்.

இவ்வாறு இலக்கியத்தாலும், இசையாலும், தொண்டாலும் சிறந்து புகழுடன் விளங்கும் நினது திருவடிக்கு எனது புன்மொழிஏறியது சிரிப்புக்குரியதே எனத்தனதுபணிவால் அபிராமி பட்டர் குறிப்பிடுகிருர். எளியேனது நாவினின்று வந்ததால் புன்மொழி எனத் தாழ்மையுடன் குறிக்கிருர்.

நாயன்மார்கள் பாடிய தலங்களைக் காணச் சிவனடியார்கள் செல்வது போல், ஆழ்வார்கள் அருளிச்செய்த திருப்பதிகளுக்குத் திருமாலடியார்கள் செல்வது போல், திருப்புகழ்த்

தலங்களுக்கு முருகனடியார்கள் செல்வது போல் அபிராமி அந்தாதியின் ‘ நாயகி ’ வாழும் திருக்கடவூரைக் காண வேண்டு மென்ற விருப்பத்தால் இன்று ஆயிரக்கணக்கில் பக்தர்கள் தினந்தோறும் திருக்கடவூர் செல்கின்றனர்.

இலட்சக்கணக்கானோர் இவ் வந்தாதியினை நாடோறும் ஓதிப் பயனடைகின்றனர்.

“ தாழ்மையுள்ளவன் உயர்த்தப்படுகிறான் ” என்பதற்கு ஏற்ப அவரது பணிவும் தாழ்மையும் அவரைப் பெரிதும் உயர்த்திவிட்டன.

“ புன்மொழி ஏறியவாறு நகையுடைத்து ” அல்ல. நின் மொழி ‘ நகை ’ யென்னும் தகையுடைத்து (அணிகலனாகும் தன்மைத்து) என அபிராமி அம்பிகை அந்தாதியினைத் தனது திருவாபரணமாகப் பூண்டு மகிழ்கிறாள் அன்றோ?

இப்பாடலின் பாராயணபலன் பெரும்புகழ் எய்துதல் ஆகும்.

"வில்லியும் – பாரதியும்"

புலவர் திரு. இரா. செல்வக்கணபதி எம். ஏ.

(மலர் 41. இதழ் 6, பக்கம் 285 இன் தொடர்ச்சி)

பார்; சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனைத் தீட்டப் பெரியன; ஓகோ!
என்னடி; இந்த வண்ணத் தியல்புகள்;
எத்தனை வடிவம்; எத்தனை கலவை;
தீயின் குழம்புகள், செழும்பொன் காய்ச்சி
விட்ட வோடைகள், வெம்மை தோன்றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்: – பாரடி!
நீலப் பொய்கைகள்; அடடா! நீல
வண்ண மொன்றில் எத்தனை வகையடி;
எத்தனை செம்மை! பசுமையும் கருமையும்
எத்தனை கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடும் தங்கத்
தோணிகள்; சுடரொளி பொற்கரையிட்ட
கருஞ்சிகரங்கள் காணடி! ஆங்கு
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட் கடல்; ஆஹா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வண்ணக் களஞ்சியம்!

செவ்வானப் பேரழகை – இத்தனை உணர்ச்சியோடு பாரதிக்கு முன்னே – பின்னே எவரும் பாடியதாக நினைவு கூர நமது நெஞ்சு மறுக்கிறது. இயற்கையைத் தனியே அர்ச்சுனனை விட்டு ரசிக்க வைக்காது, பாஞ்சாலியை அருகிருத்திப் பாடச் செய்த நுட்பம் கவிஞர்க்கே உரியது. கதிரழகு பாடியதோடு பாரதி நின்று விடுகிறார். நிலாத்தோற்றத்தை வில்லி படைக்கிறார். வில்லியின் கற்பனை நிலாத் தோற்றத்தில் பெருஞ் சிறப்பாக அமைகிறது. தேன்குடித்து மயங்கியவண்டுகள் சுற்றித்திரியும் சோலை ஒன்று. மரங்கள் மண்ணில் இருளை மிகைப்படுத்தி நிற்கின்றன; மரங்களின் அடர்த்தியால். நிலவின் கீற்றுக்கள் மரங்களின் இடைஇடையே புகுந்து தரையில் கோலமிட்டன. நிழலும் – நிலவும் கலந்து கிடந்த நிலக்காட்சி எப்படி இருந்தது! வில்லி அழகான உவமை காட்டுகின்றார். அருள்கொண்ட தம் காதலர்களோடு கூடிய மகளிரின் விரித்த கூந்தலோடு ட்டித்தொங்கி நிற்கும் வெள்ளை நிறப்பூக்கள் போன்றன

என்கிருர். கருங்கூந்தல் இடையே வெண்மலர் நிறைந்திருப்பது போல், இருளிடையே நிலவொளி கோலம் காட்டுவதாகக் கவிஞர் கற்பனை விரிகிறது.

‘ மருள்மிகு அரும்பினம் மணந்த சோலையின்
இருள்களின் இடையிடை எறித்த வெண்ணிலா
அருளுடை மைந்தர் தோள் அணைந்த மங்கையர்
புரிகுழல் நெகிழ்ந்தவெண் போது போலுமே. ’

அருளுடைமைந்தர் தோள் என அடைகொடுத்து உவமிக்கும் வில்லியின் கற்பனை மிக்க நயமானது. பாரதி அந்திவான அழகே போதுமென்பார்போல் - நிலா எழுச்சியைப் பாடாது விடுக்கிருர்.

சந்தங்களிலே வில்லியும் - பாரதியும் போட்டி போட்டு முந்தும் இடங்கள் பலவுண்டு. விருத்தப்பாக்களை விட்டு இறங்காத வில்லி! சிந்திலே நடைபோடும் பாரதி! இருவர் நடையும் தனித்தனியே சந்தக் கொழிப்புக்களுக்கு இடம் தருவன. ஒத்த தன்மையுடைய பாட்டுக்கள் இல்லாமையின் முறையாகச் சந்தச்சிறப்பினை ஒப்பிடக்கூடவில்லை. அத்தினபுரி புறப்பட்ட பாண்டவரின் யானைகளைக் கூற வந்த வில்லி பாடலில் சந்தம் கொழிக்கிறது.

மைத்திறத்தின் நின்றதிர்வன முதிர்வன வரைத்திறத்தினும் [ஓங்கும்
மெய்த் திறத்தன எழுதிறத்தினும் மிக விடுவன மததாரை
எத்திறத்தினும் பொருதொழில் புரிவன ஏழ் உறுப்புறத் [தாழ்ந்த
முத்திறத்தன எண்ணலப் பிறப்பின முரிவெங்களியானை.

பாரதியின் பாஞ்சாலி சபதமே சந்தக் குவியல் நிறைந்த பூக்காடு! நொண்டிச் சிந்து அளவொத்த ஓசையோடு துள்ளு நடையிடுவது. பாரதியின் நோக்கே இந்த நடை நலத்தில் காப்பியம் படைப்பதுதான். எத்தனையோ சந்தப் பாட்டுக்கள் பாரதியிடம் உண்டு.

‘ தந்தத்தில் கட்டில்களும் — நல்ல
தந்தத்தில் பல்லக்கும் வாகனமும்
தந்தத்தின் பிடிவாளும் — அந்தத்
தந்தத்தி லேசிறப்புத் தொழில் வகையும்

தந்தத்தி லாதனமும் — பின்னும்
தமனிய மணிகளில் இவையனைத்தும்
தந்தத்தைக் கணக்கிடவோ — முழுத்
தரணியில் திருவுமித் தருமனுக்கோ '

என்ற பாடலில், எட்டில் ஆறு வரிகளில் தந்தமென்ற சந்தச் சொல்லேற்றி ஓசையூட்டும் பாரதியைப் பாஞ்சாலி சபதத்திலே காண்கிறோம்

கருத்து விளக்கங்களுக்கு உவமைகளை எடுத்து ஆள்வது கவி மரபு. பழைய புளித்துப் போன உவமைகளைத் தூற எறிந்துவிட்டுப் பாரதி படைத்துக் கொண்ட உவமைகள் மிகப்பல. நினைந்து போற்றத்தக்க புதிய உவமை வடிவங் களில் வில்லியும் சிறந்து நிற்கிறார். விதியின் கொடுமையால் எதுவும் நிகழும் என்பதனைக் கூற வந்த அமரகவி – நடவாத உலகியல் பலவற்றை வரிசைப்படுத்துகின்றார். யாவுமே புதிய சிந்தனைகளாக அமைகின்றன.

நரிவகுத்த வலையினிலே தெரிந்து சிங்கம்
நழுவிவிழும்; சிற்றெறும்பால் யானை சாகும்;
வரிவகுத்த வுடற்புலியைப் புழுவுங் கொல்லும்;
வருங்காலம் உணர்வோராம் மயங்கி நிற்பர்
கிரி, வகுத் வோடையிலே மிதந்து செல்லும்
கீழ்மேலாம், மேல்கீழாம் கிழக்கு மேற்காம்
புரிவகுத்த முந்நூலார் புலையர் தம்மைப்
போற்றிடுவார் விதிவகுத்த போதில் நன்றே.

பாரதியில் நினைவு கூர்ந்து போற்றத்தக்க வரிகள் மிகப் பலவுண்டு. வீமன் கூற்றாக.

' இது பொறுப்பதில்லை — தம்பி!
எரிதழல் கொண்டுவா!
கதிரை வைத்திழந்தான்; — அண்ணன்
கையைப் பொசுக்கிடுவோம் '

என்ற ஆவேசப் பேச்சை நினைவு கூராதார் இல்லை. வீமன் கூற்றுக்கு மறுமொழி கூறும் அர்ச்சுனன் பேச்சில் வரும்,

' இன்று, கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும் '

என்ற தொடர் அரசியல் வட்டாரங்களிலும் ஆதரவோடு பேசப்பட்டு வருகிறது. ஆழ்ந்த பொருட் சிறப்பு மிக்கது. திரௌபதி கூற்றாக வரும்,

'பேயரசு செய்தனல் பிணந்தின்னும் சாத்திரங்கள்' என்ற அரியதொடர், பாஞ்சாலிசபதத்திலேயே மறக்கஇயலாத ஒன்று.

தனிக் காப்பியமாக இரண்டு பகுதியில் ஐந்து சருக்கங்கள் அமைக்கும் பாரதி முதற்பாகத்திலும், இரண்டாம் பாகத்திலும் கடவுள் வாழ்த்து அமைக்கிருர். வில்லியின் சூதுபோர்ச்சருக்கம் ஒரு காப்பியத்தின் அங்கமேயாதலின் இங்கே கடவுள் வாழ்த்துப்பற்றிப் பேச்சில்லே. முதற்பாகத்தில் பிரம்ம வணக்கம்பாடி, கலேமகளேப் போற்றுகின்ருர் அமரகவி.

இரண்டாம் பாகத்தில் பராசக்திக்குஒன்றும் கலேமகளுக்கு ஒன்றுமாக இரண்டு பாடல்கள் உள்ளன. பராசக்தி வணக்கம் மிகவும் சிறப்பானது. மலேயிலிருந்து கொண்டு வரப்பட்டது ஒரு கல். இரண்டாகப் பிளந்தான் சிற்பி. ஒன்றைக் கோயில் படிகளிலே அமைத்தான். மற்ருென்றினேச் சிற்பமாகச் செய்து கோயில் கருவறையில் தெய்வமாக மாற்றிவணங்கச் செய்தான். பராசத்தி! நீயோ உலகின் தாய்: எவரையும் எவ்விடத்தும் எவ்வாறும் மாற்றும் வல்லமை உனக்கியல்பாகுமே; உன் திருவடிகளேப் போற்றி நின்றேன். என்னேக் கலேதெரி புலவனுக உயர்த்தியருள்க என்பது பாடலின் பொருளமைதி. பாரதியின் பராசக்தி வணக்கம் நுட்பமுற விரிகிறது.

ஆங்கொரு கல்லே வாயிலிற் படியென்
றமைத்தனன் சிற்பி மற்ருென்றை
ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
றுயர்த்திஞன்; உலகிஞேர் தாய் நீ!
யாங்ஙனே, எவரை, எங்ஙனம் சமைத்தற்
கெண்ணமோ? அங்ஙனம் சமைப்பாய்;
ஈங்குனேச் சரணன் றெய்திஞேன் என்னே
இருங்கலேப் புலவனுக் குதியே:

பெண்மையின் ஆவேசத்தையும் – வீரசபதத்தையும் வில்லியும் புனேந்தார்: பாரதியும் புனேந்தார். இதில் பாரதியின் வேகமும் சீற்றமும் பெரிது. தன் கூந்தலேக்கைதொட்டு ஈர்த்துத் தன்னே அவை நடுவே ஆடை களேந்திட முயன்ற துச்சாதன்னேயும், தன் தொடையில் வந்து அமருமாறு நகையாடிக் கூறிய துரியோதனனேயும் போரில் மாய்ந்து அவர்கள் குருதியை – நெய்யாக என் குழல் மீது தடவியன்றி – இதனே முடிக்க மாட்டேன் என்று பாஞ்சாலி சபதம் இடும்பகுதி இரண்டு நூல்களிலும் உண்டு. வில்லியின் பாஞ்சாலி, சபதம் உரைக்கிருள்:

அரசவையில் எனேஏற்றி, அஞ்சாமல் துகில்தீண்டி, அளகம்
[தீண்டி
விரைசெய் அளி இனம் படிதார் வேந்தர் எதிர் தகாதனவே
[விளம்புவோரைப்
பொருசமரில் முடிதுணித்து, புலால்நாறு வெங்குருதி பொழிய
[வெற்றி
முரசறையும் பொழுதல்லால், விரித்த குழல் இனிஎடுத்து
[முடியேன் என்ருள்.

வில்லியில் பாஞ்சாலி, சபதம் உரைத்த பிறகே - வீமனும் அருச்சுனனும், நகுல சகாதேவர்களும் வஞ்சினம் உரைத்ததாகப் பாடல்கள் வருகின்றன. பாரதி முதலிலே பீமனேச் சபதம் செய்யவைக்கிருர். அடுத்து அர்ஜுனன் சபதம் அமைகிறது. இறுதியாகவே பாஞ்சாலி சபதம் அமைகிறது. வில்லியைப் போல் ஒரே பாடலிலே பாஞ்சாலியின் சபத மொழி பாரதியிலும் நிறைகிறது. ஆயினும் பாஞ்சாலியின சீற்றமும் - சினமும் பாரதியில் பளிச்செனத் தெரிகிறது.

தேவி திரௌபதி சொல்வாள் — ஓம்
தேவி பராசக்தி ஆணே உரைத்தேன்;
பாவி துச்சாதனன் செந்நீர் — அந்தப்
பாழ்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து — குழல்
மீதினில் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான் — இது
செய்யுமுன் னேமுடி யேனென் றுரைத்தாள்.

வில்லியின் பாஞ்சாலி, வெற்றி முரசின் ஓசை கேட்டபின் குழல் முடிப்பேன் என்கிருள். பாரதியின் பாஞ்சாலியோ எந்த இரத்தவெறி பெண்மையைக் களங்கப்படுத்தியதோ அந்தக் குருதிகளே எடுத்துக் குழைத்து என்கூந்தலில் தடவி - நெய் யாடியல்லது குழல் முடியேன் எனச் சபதமிடுகிருள்.

பாஞ்சாலி சபத மொழிக்குப் பின்னரும் வில்லி - சூது போர்ச் சருக்கத்தை நீட்டுகின்ருர். பாரதிக்கு உணர்வோடும் ஆவேசத்தோடும் கதையை நிறைவு செய்யவே விருப்பம். இறுதியில் ஒரே ஒரு வாழ்த்தினேக்கூறி பாரதி நூலேயே நிறைவு செய்து விடுகிருர். பாஞ்சாலியின் சபதத்திற்கு வானத்துத் தேவர்களும் உடன்பட்டு நல்லாசி கூறுகிருர்களாம். இயற்கையும் இதற்குத் துணையாகி நிற்கிறதாம்.

ஓம் என் றுரைத்தனர் தேவர் — ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்;
பூமியதிர்ச்சி யுண்டாச்சு; — விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழற் காற்று;
சாமி தருமன் புவிக்கே — என்று
சாட்சி யுரைத்தன பூதங்கள் ஐந்தும்
நாமும் கதையை முடித்தோம்: — இந்த
நானில முற்று நல் லின்பத்தில் வாழ்க.

பாஞ்சாலி சபதம் நிறைவு பெறுகிறது. புதிய கற்பனைக் கதை ஒன்றையோ - மக்களுக்கு முன்னரே அறிமுகம் இல்லாத பழங்கதை ஒன்றையோ பாரதி - தம் காப்பிய பொருளாகத் தேர்ந்தெடுக்காது பாரதக் கதையின் - பகுதி ஒன்றைத் தேர்ந்து கொண்டதிலே அவர் பெருவெற்றி பெறுகிறார். காரணம் கதை கூற வேண்டிய வேலை குறைகிறது. அறிந்த சம்பவங்களுக்கு உணர்வூட்டிக் கூறவேண்டும் என நினைத்த வற்றைக் கூறிச் செல்ல - முன்னரே அறிமுகமான கதை பேருதவியாகிறது.

வில்லியின் முத்திரைகள் அவர்கால எல்லையோடு ஒட்டி ஆராயும்போது ஆழமானவைகளே. பாரதியின் விடுதலை வேட்கைக்கும் தமிழ் வளர்ச்சி நோக்கிற்கும் பெண்மைக்குப் பேரிடம் தரவேண்டும் என்ற உள்ளார்ந்த உணர்வுக்கும் பாஞ்சாலிசபதம் துணைநின்றது. எளிய பதம் - எளிய நடை - எளிய சந்தம் - எல்லாரும் விரும்பும்மெட்டு இவையெல்லாம் காப்பிய வெற்றிக்குத் தூண்களாக நின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக எதனையும் உணர்வோடு வெளிப்படுத்தும் பாரதியின் கவிதை நெஞ்சம் பாஞ்சாலிக்குப் புத்துயிர் ஊட்டிற்று பாரதத்தின்பெருமையும்-பழந்தமிழின் பெருமையும்-பாரதியின் பாஞ்சாலி சபதத்தில் கால காலங்களுக்கு நின்று நிலவும். பாஞ்சாலி சபதத்தில் பாரதியும் உயிர்ப்போடு வாழ்ந்திருப்பார்.

சிவதரிசன பலன்

காலைதொழ அற்றைவினை கட்டகலும்; கட்டுச்சி
வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம்—மாலை
வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின் [யினில்
வெந்துயரம் எல்லாம் விடும்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு 28—5—1982 வெள்ளிக்கிழமைகாலைதிருவிடைவாய் ஸ்ரீபுண்ணிய கோடிநாதர் திருக்கோயிலிலும். மாலை திருக்கொள்ளம்பூதூர் ஸ்ரீ வில்வாரண்யேசுவரர் திருக்கோயிலிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றது. சுவாமி, அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. அவ்வத்தலங்களில் திருப்பதிகங்கள் பாராயணம் செய்யப்பெற்றன. ஸ்ரீ நெல்லையப்பசுவாமிகள் திருவிடைவாய்த் திருக்கோயிலிலும், திருக்கொள்ளம்பூதூர்த் திருக்கோயிலிலும் முறையே "திருமுறையின் சிறப்பு" "நாயன்மார்கள்" என்னும்பொருள்களில் சொற்பொழிவு ஆற்றினர்கள். அச்சிடப்பெற்ற தலத்திருப்பதிகநூல் வழிபாட்டிற் கலந்து கொண்ட அன்பர்கட்கு வழங்கப்பட்டது. அன்பர் பலர் வழிபாட்டிற் கலந்துகொண்டு பயனுற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமையாதீனத் திருமடத்தில் ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் முதல்ஞாயிற்றுக்கிழமையன்று காலை சரியாக 10-மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனை வழிபாட்டுக் கூட்டம் நிகழ்ந்துவருகிறது. 6-6-82 அன்று 13-வது வழிபாட்டுக்கூட்டம் நிகழ்வுற்றது. காலை 10 மணியளவில் தொடங்கி, கூட்டுப்பிரார்த்தனையை அடுத்துத் தருமையாதீன வேத சிவாகம பாடசாலை ஆசிரியர் திரு. P S. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் குருவின் பெருமைகள்பற்றி எடுத்துக்கூறி, இறைவனே குருவாக எழுந்தருளி வந்து அருள் செய்வன் என்பதைச் சான்றுகளுடன் விளக்கி உரையாற்றினர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள், வித்யாகுரு, ஞானகுருவின் பணிகள் பற்றியும், குருவருள் பெறுதலின் இன்றியமையாமைபற்றியும் அருள் பெறுதற்கேற்ற உயிர்களின் பக்குவம் பற்றியும் தக்க மேற்கோள்கள் காட்டி இனிய எடுத்துக்காட்டுகள் மூலம் மனம்கொள்ளும்வண்ணம் விளக்கி ஆசியருளினர்கள். மாயூரம் நகரப்பெருமக்களும் தருமையாதீனக் குருபூசை விழாவையொட்டி நிகழ்ந்த சமயப்பயிற்சி வகுப்பில் பயின்ற 41 மாணவர்களும்

சைவ அன்பர் பலரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். அடுத்த பிரார்த்தனைக் கூட்டம் 4—7—82 முதல் ஞாயிறன்று நிகழ இருக்கிறது. அன்பர்கள் கலந்துகொண்டு பயன் பெறுவார் களாக.

தருமையாதீனத்தில்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழா

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ஜீவசமாதி எய்திய திருக்கோயிலாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலயத்தில் 3—6—82 அன்று தொடங்கிப் பெருவிழா நிகழ்வுற்றது. நாள்தோறும் பஞ்சமூர்த்திகள் திருவீதி யுலாக்காட்சி நிகழ்வுற்றது. திருவீதியுலாவின்போது ஆதீன வேத சிவாகம பாடசாலை, தேவார பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீன தேவஸ்தான ஓதுவாமூர்த்திகளும் வேத பாராயணமும் திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தினர்கள் அன்பர் பலர் தரிசித்து இன்புற்றனர்.

குருபூஜைப் பெருவிழா :

தருமையாதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைப் பெருவிழா 12-6-82 சனிக்கிழமையன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை தருமையாதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ ஆனந்தபரவசர் பூங்காவிலுள்ள குருமூர்த்தங்களை வழிபட்டு ஆன்மார்த்த மூர்த்தி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை செய்தார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் ஸ்ரீமத். காசிவாசிசுவாமிகள் வழிபாட்டிற்கலந்துகொண்டு திருவருட்பிரசாதம் பெற்று மகிழ்ந்தார்கள். நண்பகல் ஸ்ரீ ஞான புரீசுவரர் திருக்கோயிலில் விசேஷ அபிஷேகங்களும் பஞ்ச முகார்ச்சனையும், நவசக்தி அர்ச்சனை ஆகியவையும் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந் தருளி வழிபாடாற்றி, வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்கட்கு அருட்பிரசாதம் வழங்கினர்கள். குருபூஜைவிழாமலராகக் 'குரு வழிபாடு' என்னும் நூல் வெளியிடப்பெற்றது. ஸ்ரீ ஞானபுரீ சுவரர் திருக்கோயில் வழிபாடு நிறைவெய்தியபின் நண்பகல் மாகேஸ்வரபூஜை நிகழ்வுற்றது. குருபூஜை விழாவில் அன்பர் கள் பலரும் கலந்துகொண்டு வழிபட்டுப் பயனுற்றனர்.

குருமூர்த்த தரிசனம் :

குருபூஜைத் திருநாள் 12—6—82 அன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் மாலை 6 மணியளவில் நாதசுர இன்னிசை

முழக்கத்துடன், திருமஞ்சனவீதியில் அமைந்திருக்கும் குருமூர்த் தங்களைத் தரிசித்து வழிபாடாற்றஎழுந்தருளினர்கள். குருமூர்த்த வழிபாட்டின்போது ஒவ்வொரு குருமூர்த்தத்திலும் அருள் வரலாறு கூறபபெற்றது. குருமூர்த்த வழிபாட்டிற்குப் பின் ஸ்ரீ தருமபுரீசுவரர். ஸ்ரீ அஷ்டாதசபுஜமகாலட்சுமிதுர்க்காதேவி, ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில்களில்வழிபாடாற்றித் திருமடத் திற்கு எழுந்தருளினர்கள். ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குக் குருபூஜைத் திருநாளில் நிகழ்த்தப்பெறுகின்ற சிறப்பு வழிபாடு கள் திருமெய்ஞ்ஞான நிவேதனத்துடன் நிகழ்த்தப்பெற்றன. வழிபாட்டிற்குப் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கொலு வீற்றிருந்து அருட்காட்சி வழங்கியருளினர்கள். ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் கொலு வழிபாடு நிகழ்த்தினர்கள். ஆதீனத்திருக்கூட்டத்து அடியவர்களும் அறிஞர் பெருமக்களும் அன்பர்களும் தரிசித்து அருட்பிரசாதம் பெற்றுய்ந்தனர்.

பட்டினப் பிரவேசம் :

13—6—81 ஞாயிற்றுக்கிழமை பட்டினப் பிரவேசத்திருநாள் அன்றுகாலை ஸ்ரீ சொக்கநாதப்பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. காலை சிவபூஜா துரந்தரர் ஐம்பத் தொருவர் சிவபூசை புரிந்தகாட்சி மிகச்சிறப்பாக அமைந்திருந் தது. நண்பகல் மாகேசுவரபூஜை நடைபெற்றது. இரவு தருமை ஆதீன இசைப்புலவர் சீகாழி எஸ். கோவிந்தராஜன் குழுவின ரின் இன்னிசைநிகழ்ச்சிநடைபெற்றது, பின்னர் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் சிவிகையில் எழுந்தருளித் திருவுலாக் காட்சி தந்தருளினர்கள். ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகளும் திருக் கூட்டத்து அடியவர்களும், அறிஞர் பெருமக்களும் அன்பர் களும் உடன்வரத் திருவுலாக்காட்சி நடைபெற்றது. திரு. ஏ. கே. சி நடராஜன் குழலிசை, ஆந்திரதம்பதிகள் ஷேக் மெகபூப் சுபானி, காலி ஷாபி சுபானி குழுவினர் முதலியோரின் நாதசுர இன்னிசையுடன் திருமுறை இன்னிசையும் முழங்க வீதியுலாக் காட்சி நிகழ்ந்தது. தருமையாதீனத் திருவீதிகளில் அன்பர்கள் பூரணகும்பங்கள்வைத்து ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்களை வழிபட்டு அருட்பிரசாதம்பெற்றனர். திருவுலாக்காட்சி நிறை வெய்தியதும் திருக்கொலுக் காட்சி நடைபெற்றது. அன்பர் கட்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியருளி, அருட் பிரசாதம் வழங்கினர்கள்.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு:

தருமையாதீனக் குருமுதல்வர் குருபூஜைப் பெருவிழாவை ஒட்டி, 3—6—82 முதல் 13 6—82 முடிய, திருநெறிய தெய்வத்

தமிழ்மன்றத்தில் நாள்தோறும் மாலை 7 மணியளவில் மாநாடு நிகழ்வுற்றது. திருநந்தி தேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசினிகள், பரஞ்சோதி மாமுனிகள் என்னும் அகச் சந்தான குரவர் திருநாட்களாக முதல் நான்குநாட்களும் மெய்கண்ட தேவர், அருள்நந்தி தேவர், மறைஞானசம்பந்தர், உமாபதி தேவர் என்னும் புறச் சந்தானகுரவர் திருநாட்களாக அடுத்த நான்கு நாட்களும் அருள்நமச்சிவாய தேவர், கமலை ஞானப் பிரகாசர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் என்னும் கயிலாய பரம்பரையி னர் திருநாள்களாக மூன்றுநாள்களும் நடைபெற்றன.

மாநாட்டின் முதல்நாளன்று பாண்டிச்சேரி பிரஞ்சுஇந்தியப் பண்பாட்டுக்கழக மொழித்துறைத் தலைவர் திரு. என். ஆர் பட் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்துச் சிறப்புரை ஆற்றி னார்கள். 7—6—82 அன்று தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களும், 11—6—82 அன்று குன்றக்குடிதிருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகாசந்நிதானம் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். மாநாட்டில் திரு. ந. ரா. முருகவேள், மகாவித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர், திருக்குடவாயில் திரு. எம். பாலசுப்பிரமணியம், திரு. மா. வயித்தியலிங்கம், திரு. எம். சோணைமுத்துக்கோன், திரு. இரா.இராஜசேகரன், திரு. என்.காசிராமன், திரு. வை. ஆறுமுகம் பிள்ளை, டாக்டர் திரு. மு. சுவாமிநாதன், திரு. கி.வா.ஜகந்நாதன், தஞ்சைமாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ச. மெய்கண்டதேவன், டாக்டர். திரு ஏ. வி. ஜயச்சந்திரன், டாக்டர் திரு. வி. அய். சுப்பிரமணியம், திரு. அ. சங்கரநாராயணன், டாக்டர் திரு. எஸ். ஆறுமுகம், திரு. தா. குருசாமிதேசிகர், திரு. பாலசுப்பிரமணியம்' திரு. சி. குமரேசன், திரு. மு. வைத்தியநாதன், டாக்டர் திரு. கே அரங்கசாமி பிள்ளை, திரு. மீ. ப. சோமசுந்தரம், டாக்டர் திரு சொ. சிங்காரவேலன், திரு. துளசிஐயா வாண்டையார் முதலிய அறிஞர்கள் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினர்கள், பிர்மஸ்ரீ T. S. பாலகிருஷ்ண சாஸ்திரிகள் குழுவினரின் இன்னி சைத் தொடர்விரிவுரை 6—6—82 முதல் 11—6—82 வரை நிகழ் வுற்றது.

3—6—82 அன்று சிதம்பரம் செல்வன் D. சுவாமிநாதன், D. பாலசுப்பிரமணியன் வயலின் இன்னிசையும், 4—6—82 அன்று மாயூரம் செல்வி T. R. மஞ்சுளா குழுவினரின் தெய்விக நடன நிகழ்ச்சியும், 5—6—82 அன்று சிதம்பரம் திரு. K. பாலு குழுவினரின் மெல்லிசையும், 22—6—82 அன்று மதுரை திருமதி. ஆர். விஜயலட்சுமி எம். ஏ பி எல். குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும், 13—6—82 பட்டினப்பிரவேசத்திருநாளன்று சீகாழி

திரு. எஸ். கோவிந்தராஜன் அவர்கள் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றன. 9—6—82 திருக்கல்யாணத் திருநாளன்று மாயூரம் ஸ்ரீ கணநாதர் பொம்மை நாடக சபையினரின் 'வள்ளித்திருமணம்' பொம்மை நாடக நிகழ்ச்சி நடைபெற்றது. சமயப் பயிற்சியாளர்களும் மாயூரம் நகரப் பெருமக்களும் அன்பர்களும் விழா நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் பயன் பெற்றனர்.

சமயப் பயிற்சி வகுப்பு :

குருபூஜை விழாவை முன்னிட்டு 3—6—82 முதல் 13—6—82 முடிய, பதினொருநாட்கள் சமயப்பயிற்சிவகுப்பு நடைபெற்றது. பயிற்சி வகுப்பினை மாயூரம் திரு. வி. ஆறுமுகம் பிள்ளை I. A. S. (ஓய்வு) அவர்கள் தொடங்கிவைத்தார்கள். பயிற்சி வகுப்பில் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளினின்றும் வந்திருந்த நாற்பத்தொருவர் பயின்று பயனுற்றனர். சமயப்பயிற்சியாளர்களுக்கு உணவுஉறையுள் முதலியவசதிகள் ஆதீனத்தில்செய்துகொடுக்கப்பட்டன. சிவஞானபோதம், உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருக்களிற்றுப்படியார், சிவஞானசித்தியார், திருவருட்பயன் ஆகிய சாத்திர நூல்கள் வேதம், ஆகமம், புராணம், உபநிடதம், திருமுறைகள், பண்டார சாத்திரங்கள், நீதிநூல்கள், கல்வெட்டு, சித்தமருத்துவம், தாயுமானுர் பாடல்கள் பற்றிய வகுப்புகள் நடைபெற்றன. திருவைந்தெழுத்து எழுதும் பயிற்சியும், திருமுறை ஓதும் பயிற்சியும் நல்கப்பெற்றது. காலை 7-30 மணிக்குத் திருக்கோயில் வழிபாடு பயிற்சியின் அங்கமாக நிகழ்வுற்றது. 13–6—82 ஞாயிறன்று மாலை பயிற்சி வகுப்பு நிறைவுவிழாவின்போது, பூண்டி திரு. துளசிஐயாவாண்டையார் அவர்கள் உரை நிகழ்த்தி, சமயப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினர்கள்,

திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழா

தருமையாதீனத்திற்குச் சொந்தமான ஆச்சாள்புரம் என வழங்கும் திருடபெருமணநல்லூர் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜ சுவாமி ஆலயத்தில் ஸ்ரீ திருஞானசம்பந்தர் திருக்கல்யாண விழாவும், சிவஜோதி தரிசனமும், தேவஸ்தானத்தின் தேவார வகுப்பு ஆண்டு விழாவும் 7—6—82 அன்று சிறப்பாக நடைபெற்றது. திருவாரூர், வித்துவான் திரு. சு. மு. சுந்தரராசன், எம்.ஏ. அவர்கள் 'திருஞானசம்பந்தர் திருமணம்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றித் தேவார வகுப்பு மாணவர்கட்குப் பரிசு வழங்கினர்கள். அன்பர் பலர் விழாவிற் கலந்துகொண்டு இறையருள்பெற்றனர்.

உ

எதிர்காலம்

★

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(துந்துபிஷு ஆனிமீ 1உ முதல் 32உ முடிய)

(15—6—1982 முதல் 16—7—1982 முடிய)

சந்	சு	பு	ல/ சூ ரா
	இராசி		
கே		கு	செ சனி

ல/ பு ராகு	செ		சனி
	அம்ஸம்		
			சந்
கு	சு	சூ	கே

துந்துபி வருஷம் ஆனிமீ 1உ மங்களவாரம் உத்திரட்டாதி நக்ஷத்திரம் தைதுலைகரணம் கூடியகாலத்தில் சூரியஉதயம்முதல் 3 நாழிகை 16 விஞடிக்கு மிதுன லக்னத்தில் ஸ்ரீ லோக ரட்சக ரான சூரியபகவான் உலகம் உய்யும் பொருட்டு ரிஷபராசியி லிருந்து மிதுன ராசி சங்கிரமணமாக ஆனிமாதப் பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று ஷடசீதி புண்ணிய காலமாகும். அர்க்காதிபதி செவ்வாய்பகவான் ஆகிருர். ஆனிமாதம் 8உ ஸ்ரீ சூரியபகவான் திருவாதிரை நக்ஷத்திரத்தில் பிரவேசித்து மேகாதிபதியை ஏற்படுத்துகிருர். அவரும் செவ்வாய் பகவாஞக உள்ளார். ஆகையால் உலகில் மன்னர்களுக்குப் பயம், யுத்தம் ஏற்படும் நிலைமையாகும். பூமியில்விளைகின்ற வியாபார வஸதுக் கள் விலைஏறுதலும் பற்ருக்குறையும் ஆகும். மூர்க்கத்தனமுடை யோரால் ஸ்திரிஜனங்கள், சாதுக்கள், பசுக்களுக்குப் பாதகச்

செயல் நிகழும். சர்வேசுரனுடைய கிருபையில் சகல ஜீவன்களுக்கும் சம்ரக்ஷணை ஏற்படும். சிஷ்ட பரிபாலனம் ஆகும். ஆன்றோர்களினால் எங்கும் புனித ஸ்தலங்களில் தெய்வ சம்ரோக்ஷணங்கள், சிவ கைங்கரியங்கள், பொதுநல தர்மங்கள் நடைபெற்றுகொண்டிருக்கும். தேசமக்கள் நல் உழைப்பில் நற்பயன் அடைந்து ஜீவனம் செய்து வருவார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் சிவ சமய பரிபாலன கர்த்தாக்களாக இறைவனருளில் அவதாரமாகி வந்து சிவராஜயோகத்தில் திருவீற்றிருக்கின்ற சிவஞான குரு மகான்கள் உலகத்திற்கு மனுநீதி தர்ம வழிமுறைகளையும் சிவாசார நியமத்தினையும் உபதேசித்து அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள், சிறப்புப் பூசைகள் நடைபெறும். தெய்வங்களுக்கு இலட்ச கோடி அருச்சனைகள் லோக் சுபிட்சார்த்த யாக வேள்விகள் நடைபெற்றுகொண்டிருப்பதினின்றும் இவ்வுலகம் உய்யும். எல்லா பிரஜைகளும் தெய்வ பக்தியில் திரிகரண சுத்தமாகி நற்கிரியைகள் புரிந்து க்ஷேமகரமாக வாழ்வார்கள்.

1. மேஷம் :- அசுவதி – பரணி. கார்த்திகை – $\frac{1}{4}$

(சு. சே. சோ. லா - லி. லு. லே. லோ. – அ.)

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப சுபிட்சம் நன்றாக இருந்துவரும் நல்ல பணவருமானங்கள் வந்துகொண்டிருக்கும். பூமியில் இயந்திரங்களில் விருத்திபலன் ஏற்படும். ஜூன் 20உ முதல் வாகனபிராப்தியில் விசேஷபலன் உருவாகும். நல்ல சம்பவங்கள் நிகழும். ஜூன் 17, 18, 21, 22, 28, 29, 30 ஜூலை 1, 7, 8. 9. 10, 11 தேதிகளில் தெய்வதரிசனம், மனோதிடம், காரியமேன்மை ஆகிய நற்பலன் ஏற்படும். ஜூலை 2, 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திமபலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ – உரோகிணி – மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

(இ. ஊ. ஏ. – ஒ. வ. வி. வூ. – வே. வோ.)

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் ஜூன் 29உ முதல் நல்ல பணப்புழக்கத்தை ஏற்படுத்தும். சகோதரர் ஒன்று கூடுவர். வீடுவாகன பிராப்தியிலும் புத்திரர் நலனிலும் நெருக்கடியான நிலைமையில் செலவு ஏற்படும். ஒப்பந்தவிஷயங்களில் நல்லனஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜூன் 15, 16, 19, 20, 23, 24, 25, 30

ஜுலை 1, 2, 3, 4, 10. 11, 12, 13 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஜுலை 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை – புனர்பூசம் ¾
(கா. கி. - கு. க. ஸ. ச்சா. – கே. கோ. ஹ.)

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்பத்தில் நல்ல பணவருமானங்களை ஏற்படுத்தும். சுபவிசேஷங்களிலும் கௌரவத்திலும் செலவுகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். சகோதரர் சம்பந்தமாக உள்ள மனக்கவலைநிவர்த்தியாகும். புத்திரருக்குச் சுபம்தரும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். ஜுன் 15, 16, 17, 18, 21, 22, 25, 26, 27 ஜுலை 2, 3, 4, 5, 6, 12, 13, 14, 15, 16 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜுலை 7, 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன்தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.
(ஹி. – ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ.)

கடகராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். மாதக்கோள்கள் பலமாக இருப்பதால் ஜுன் 20உ முதல் நல்ல பணவருமானங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். மனோவைராக்கியத்தில் காரியங்களை நடத்துதல் ஆகும். வீடு வாகனப்பிராப்தியில் பத்திர லிகிதங்களில் நல்லன ஏற்பட்டுவரும். சுகம் தரும். இரசாயனம் மருத்துவம் இவற்றில் நல்லஅனுபவத்தை ஏற்படுத்தும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜுன் 17, 18, 19, 20, 23, 24, 25, 28, 29 ஜுலை 5, 6, 7, 8, 9, 15, 16 தேதிகளில் நற்பலன்களையளிக்கும். ஜுலை 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼
(ம. மி. மு. மே. – மோ. ட. டி. டு. – டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். குடும்ப அபிவிருத்தியில் தன வருமானங்கள் மிகுந்துவரும். பூமி இயந்திரங்களில் ஓரளவு செலவும் ஆகும். சகோதரர் சுகம் நன்றாக இருந்துவரும். வீடு வாகனப் பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். புண்ணிய க்ஷேத்திர பயணம் ஒன்று நேரும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜுன் 19, 20, 21, 22, 26, 27, 30

ஜுலை 1, 7, 8, 9, 10, 11 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஜுன் 15, 16 ஜுலை 12, 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$

(டோ. ப. பி. – பு. ஷ. ண. ட. - பே. போ.)

கன்னியாராசி 9 பாதங்களும் சுபபலன்தரும். குடும்பாபி விருத்தியில் நல்ல பணவருமானம் வரும். இல்லத்தில் சுபம் நடக்கும். சுற்றத்தார் வருகை தருவர். பூர்வப்பொருளினின்றும் ஓர் நற்பலன் வருவதாகும். வித்துவத்துவத்தில் மேன்மைஸ்திதி ஏற்படும். புத்திரனுக்கு உயர்வுதரும். இராசிக்குத் தேகநலம் பாதிக்கினும் சௌகரியமாகும். மனைவி சுகம் நன்ருக இருந்து வரும். ஜுன் 21, 22, 23, 24, 25, 28, 29 ஜுலை 2, 3, 4. 10. 11, 12, 13 தேதிகளில் ஸ்லாக்கியபலன் ஏற்படும். ஜுன் 17, 18 ஜுலை 14, 15, 16 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில் மத்திம பலன் தரும்.

7. துலாம் :- சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

(ர. ரி. – ரு. ரே. ரோ. தா. – தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கும். பூமி இயந்திரங்களிலும் பெற்ருேர் நலனிலும் பணம் செலவாகும். ஜுன் 23உக்கு ஸ்திரப்பொருளில் முதலீடு ஆகும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஜுன் 15, 16, 17, 18, 23. 24, 25, 26, 27, 30 ஜுலை 1, 5, 6, 12, 13, 14, 15, 16 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜுன் 19, 20 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. – நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனு நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். இல்லத்தில் சுபமானவற்றில் செலவும் ஆகும். பூமியில் இயந்திரசாதனங்களில் நல்லன ஏற்படும். வித்வத்துவம் கலைத் துறைகளில் உத்தியோகத்தில் ஜுன் 29உ முதல் நன்மைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் நலம் நன்ருக இருந்துவரும். ஜுன் 17, 18, 19, 20, 26, 27, 28, 29 ஜுலை 2, 3,

4, 7, 8, 9, 14, 15, 16 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூன் 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼
(யே. யோ. பா. பி. - பு. த. ப, ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் மதிப்புடன் வரும். உத்தியோகத்தில் தொழில்துறைகளில் ஊக்கம் மிகுதியாய் இருப்பினும் கட்டுப்பாடாகவே இயங்கிவரும். சிலசமயங்களில் ஆயாச நிலைமையாகும். ஸ்ரீ துர்க்காம்பிகைக்கு அருச்சனைசெய்ய மனைவி சுகம் பெற்றோர் சுகம் நன்றாக இருந்துவரும். ஜூன் 19, 20, 21 22, 28, 29, 30 ஜூலை 1, 5, 6, 10, 11 தேதிகளில் நற்பலன் தரும். ஜூன் 23, 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½
(போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி.)

மகரராசி 9 பாதங்களும் சுபமானபலனைத்தரும். பணவருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். ஜூன் 29உ ஆனல் வித்தியா வியாபாராதிகளில் எழுத்துமூலவிஷயங்களில் நல்லன ஏற்படும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடைபெற்று வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூன் 15, 16. 21, 22, 23, 24, 30 ஜூலை 1. 2, 3, 4, 7, 8, 9, 12, 13 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜூன் 25, 26, 27 தேதிகள் சந்திராஷ்டமம். மற்றதேதிகளில்மத்திமபலன்தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
(கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா.)

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வந்துகொண்டிருக்கும். சகோதரர் நலம் சாதாரணமாக இருந்துவரும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். நவீன சாதனங்களில் பிராப்தியையளிக்கும். ஞாயிற்றுக்கிழமை சூரியார்ச்சனை செய்ய வயிற்று உபாதைபோன்ற உஷ்ண நலிவு நீங்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். ஜூன் 17, 18, 23, 24. 25, 26 ஜூலை 2, 3, 4, 5, 6, 9, 10, 11, 14, 15, 16 தேதிகளில் தனதாயாதி நற்பலன்களை

யளிக்கும். ஜுன் 28, 29 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன்தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

(தி. - து. ஸ. ச. த. - தே. தோ ச. சி.)

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுகநடக்கும். குடும்பாபி விருத்தியில் பண வருமானங்கள் நல்ல விதத்தில் வந்துகொண்டிருக்கும். வெள்ளைக்கல்பதித்த ஆபரண பிராப்தியையளிக்கும். விடுவாகனங்களில் நவீனம் பொருந்தும். பொதுநலன்களில் தொண்டு மேற்கொள்ளும். மனைவிக்குச் சாதாரணமாக உள்ள வாயு, இரத்தக்கொதிப்பு போன்ற தேகநலிவு குணமாகும். ஜுன் 15, 16, 19, 20, 26, 27, 28, 29 ஜுலை 5, 6, 7, 8, 9, 12. 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜுன் 30 ஜுலை 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

ஆனிமாதச் சிறப்பு நாட்கள்

15—6—82	செவ்வாய், ஷடசீதிபுண்ணியகாலம். திருவையாறு மாதப் பிறப்புத் தீர்த்தம். மிதுனரவி 3-16.
19—6—82	சனி, வேளூர் மண்டலாபிஷேகக் கிருத்திகை. தருமை சண்முகர் கிருத்திகை அபிஷேகம். கிருத்திகை விரதம். சனிமகாப்பிரதோஷம். ஆனித் திருமஞ்சன உற்சவ ஆரம்பம். மாதசிவராத்திரி.
20—6—82	ஞாயிறு, போதாயன அமாவாசை.
21—6—82	திங்கள், சர்வ அமாவாசை.
24—6—82	வியாழன். தருமை 19 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக சுவாமிகள், 23 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் குருபூஜை.
25—6—82	வெள்ளி, ஆயில்யவிழா, ஸ்ரீ மாணிக்கவாசகர் குருபூஜை.
26—6—82	அமர்நீதி நாயனர் குருபூஜை.
27—6—82	ஞாயிறு, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம். தருமை 3 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சச்சிதானந்த தேசிக சுவாமிகள் குருபூஜை.
28—6—82	திங்கள், ஆனித்திருமஞ்சனம். திருக்கடவூர் ஸ்ரீ காலசம் காரமூர்த்தி அபிஷேகம். மயிலாடுதுறை – வள்ளலார் கோயில் ஸ்ரீவதான்யேசுவரசுவாமிசம்வத்ஸராபிஷேகம்.
29—6—82	செவ்வாய், உதயத்தில் ஸ்ரீ நடராஜர் தரிசனம்.
1—7—82	வியாழன், திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவரசுவாமி சம்வத்ஸராபிஷேகம்.
3—7—82	சனி, சனிமகாப்பிரதோஷம்.
5—7—82	திங்கள், பௌர்ணமி விரத பூஜை. மாதபூஜையில் முப்பழம் சாத்துதல். காரைக்கால் மாங்கனி உற்சவம்.
8—7—82	வியாழன் வைத்தீசுவரன்கோயில் ஸ்ரீ வைத்தியநாத சுவாமி சம்வத்ஸராபிஷேகம்.
9—7—82	வெள்ளி, திருப்பறியலூர் ஸ்ரீ வீரட்டேசுவரசுவாமிக்கும், திருக்குவளை ஸ்ரீ பிரமபுரீசுவர சுவாமிக்கும் சம்வத்ஸரா பிஷேகம். சங்கடஹரசதுர்த்தி.
12—7—82	திங்கள், மயிலாடுதுறை காசிவிசுவநாதசுவாமிகோயில் ஸ்ரீ விசுவநாதசுவாமி சம்வத்ஸராபிஷேகம்.
13—7—82	செவ்வாய், திருக்கடவூர்ஸ்ரீமுனீசுவரபூஜை,காளாஷ்டமி. ஏயர்கோன்கலிக்காம நாயனர் குருபூஜை.
15—7—82	வியாழன், வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு, நாகை முதலிய தலங்களில் ஆடிப்பூர உற்சவ ஆரம்பம்.
16—7—82	வெள்ளி, கடகரவி 39-59, தக்ஷிணயன புண்ணியகாலம். திருவையாறு தீர்த்தம். சீகாழியில் உச்சிக்காலத்தில் புழுகாப்பு. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்திக்கு அபிஷேகம். ஆடிப்பண்டிகை.

Printed & Published by V. Ramaiah Pillai, Managar, Dharmapuram at the Gnanasambandam Press Dharmapuram, Mayuram. 10-6-82